UNIVERSITY OF SRI LANKA ... CAMPUS — RECEIVED 1979-4-19 — PERIODICALS DIVISION — LIBRARY

ஓம்
விநாயகநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ் 2 காலயுத்திவருஷம் பங்குனிமாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை [16-3-1979] சுடர் 9

## பூவொடு நீர் சுமந்து போற்றும் புண்ணியர் பின்பு நாம் செல்வோம்.

இவ்வாறு சொல்கின்றார் திருநாவுக்கரசர். அவர் திருவாக்கைச் சிந்தித்திட்டால் திருவருள் நிலை பெறுதற்கு வழி எது என்பது யாவர்க்கும் விளங்கும்.

உலகில் புண்ணியம் பாவம் என இரு பொருள் உண்டு. ஒருவர் புண்ணியம் செய்தார் அல்லது செய்கின்றார் என்றால் அதனை அறிவதற்கு ஏது என்றால் அவர் நிலையில் பூவுண்டு நீருண்டு என உணருங்கள் என்கின்றார் திருநாவுக்கரசர். பாவிகளது கையில் அது ஒருபோதும் வராது. பாவிகள் பூவை நீரை பொருள் எனக்கொள்ளார்கள். அவர்கள் வழியில் வாகனம் பொருள பொன் பூவையர் வீடு மாளிகை இவற்றின் சிறப்பும் இன்னமும் இன்னமும் இவைசிறக்க வழி செய்தலுமாக அமையும். அவர்கள் அந்த அந்த பெருமையில் தமமை பெரிதாக மதித்து தமக்கு ஈடு இணை இல்லை என்ற நிலையில் இறுமாந்திருந்து பின்னர் காலமுடிவில் அந்தோ சொல்லமுடியாத அல்லல்பட்டு இறப்பார்கள். இவர்கட்குத் தெய்வம் தெளிவு அன்பு இரக்கம் தூய்மை உண்மை கபடமிலாத பேச்சு இவையாவும் அப்பாற்பட்ட பொருள்கள். இவைகள் இப்பாவிகளை வந்தடையாது.

இந்த பாவிகள் வழியில்தான் இன்று தென்இந்தியாவில் உள்ள சமயப்பிரசாரகர் என்போரும் மடாதிபதிகளும் எந்தவகையான சுவாமிகளும் பாடக பாடிகளும் உள்ளனர். இவர்கள் வழியில் எக்காலமுமே நன்மை வராது. இவர்கள் யாவரும் தம் சமய வாழ்வை அறிவைப் பயன் படுத்தி பொருள் ஈட்டும் வகை அறிந்தாரே அன்றி அருள் நிலைக்கு ஆளானர் என்று சொல்ல முடியாது. தாயுமானப் பெருந்தகையார் காலத்தின் பின்னுக எந்த ஒரு மகானும் தென்இந்தியாவில் தோற்றினர் இல்லை எனவே சொல்லலாம். அப்படி யாரும் இருந்தாரும் உலக பந்தங்களில் சிக்குப்பட்டு சங்கடப்பட்டவரே அன்றி அவர் வழி ஓர் தூய சைவநெறிக்கு இலக்காக உள்ளது என நாம் சொல்ல முடியாது.

திருநாவுக்கரசருடைய பூவொடு நீர் சுமந்து ஏத்தி புகுவார் அவர் பின்பு புகுவேன் என்ற போது அந்த ஒரு திருவாக்கில் நமது தூயவழிக்கு ஆணித்தரமான விளக்கம் காட்டுகிறார்.

நமது வேதங்கள் போற்றியும் புகழ்ந்தும் காணமுடியாது மலையும் திருவடிகளை நாம் எவ்வாறு அறியலாம். தேடி அறியலாமோ? அது முடியாது. காக்கும் கடவுள் நாராயணனும் படைக்கும் கடவுள் பிரமனுமே தம் வலிமையால் தேடிக் கண்டிடுவோமென முற்பட்டு அவராலும் முடியாது பின்னர் பூவும் நீரும் கொண்டு போற்றி செய்து தரிசனம் பெற்றார். அந்த வழிதான் என்றுமுள்ளவழி. இந்த உலகில் அந்த ஒரு வழிக்கு பிந்தியதே எல்லாவழியும்! அதற்கு நிகர்யாதுமில்லை. காலையில் எழுந்து வாசமலர் கொய்து நீரும் ஏந்தி எடுத்து எம்பெருமானை நீராட்டி மலர் இட்டு அர்ச்சித்தலைச் செய்வோர அனைவரும் பெரியவரே! அவர்க்கு நிகராவார் ஆருமிலர். அவர்வழியே உண்மைவழி, அத்தகைய அருட்தாகமுடன் அர்ச்சிப்பாரில் நாம் வேற்றுமை காண முற்படலாமோ? முடியாது! இந்த உண்மையை உணராது பாதகவழி பொருள் ஈட்டும் நோக்கமுடன் அரோகராச் சொல்லிக் கொண்டு இங்கு வந்து வடிவாய்ப் பாடி தாளம் போட்டு தலையாட்டும் பாவிகளை நீங்கள் சுவாமி என நம்பி முருகன் என நம்பி விழுந்தடித்து ஓடிப் போய் பிரசங்கம் கேட்டு வீட்டுக் கதையும் பேசினியளே! பாவக்காய் சம்பல் தயாரிக்கும் முறையும் கதைபோடை கதையாகக் கேட்டியளே! பேதை யாழ்ப்பாணத்தாரே! என்று தான் உங்கட்கு நல்உணர்வு வரும். இந்தப் பெரிய அற்புதங்களைச் செய்த திருநாவுக்கரசர் இப்படியாக தாம் பூவோடு நீர் சுமந்து போற்றி எம்பிரான் திருவடியில் காதலிப்பார் பின்னுக நாம் செல்வோம் எனச் சொன்னுல் தென் இந்தியாவில் இருந்து இங்கு றேட் பேசி முற்பணமும் வாங்கி வரும் எந்தச் சுவாமி அவர் வழியில் உள்ளது. ஒருவரைக் காட்ட உம்மால் முடியுமா? தயவு செய்து பதில் தாருங்கள்.

சைவத்தின் அத்திவாரம் பூவும் நீரும். அதற்த மிஞ்சி யாதுமே இல்லை. அப்படியாக அயல் அறியாது அடக்கமுடன் புகழ் விரும்பாது தம்மையே பெருமை என எண்ணுது தன்னை மறந்து தானும் ஒன்றின்றி வழிபடும் பெரியோர்உண்டு. இவரன்றி பாட்டும் பிரசங்கமும் தலையில் தேங்காய் உடைத்தால் திருநீறு படத்தால் கொட்டுண்ணுதல் வடிவான பெண்களுக்கு யோகம் பழக்குதல் மறையவைத்து மதுவுண்டு அலுப்புத்தீர்ந்து பின்னேரம் சுவாமியாக இளவரசு ஒன்று தோயவார்க்கப் போகும் மாப்பிள்ளைக்கு மொட்டாக்கு போட்டதுபோல் தலையை சால்வையால் மூடி அருகில் இருக்க தொலு இருக்கும். தம்பிரான்கள் மடாதிபதிகள் இவையாரும் தம் வழிபாட்டை விற்று உண்ணும் பேதையானவரே! இவர் வழியில் ஒருபோதும் உண்மை தழைக்காது. முப்பது நாளும் மது உண்டு மாமிசம் புசிக்கும் பாதகர் இந்த மடாதிபதிகட்கு இரண்டாயிரம் ரூபா தட்டினுல் பின்னேரம் மடாதிபதி சோடினையுடன் வந்து பட்டம் கொடுப்பது இன்று நடவாதல்ல நடந்துள்ளது. கோபவெறியில் கர்ப்பூரத்தட்டு சுழற்றி எறிந்தவனை பூநூல் கழற்றிகாலடந்தவனை இந்த மடாதிபதிபிரதிட்டா இரத்தினம் என பட்டம் கொடுக்கிறுன். உண்மையில் இன்று இத்தகைய மடாதிபதிகளால் சைவநெறிக்கு நேர்ந்துள்ள அவமானம எப்பொழுதுமே இல்லை! நல்ல வேளை நாயன்மார் காலத்து இந்த மடாதிபதிகள் சிவத்தமிழ்கள் இல்லை. அப்பொழுது சைவநெறியின்உயர்வு விளங்கிய காலம். இன்று இந்த மடாதிபதிகளும் பிரசங்ககாறரும் எம்சமய நெறிகளை பிறசமத்தவர் கிழ்நோக்கி பார்த்துசிரிக்கும் படி வைத்துள்ளனர்.

இத்தகையோர் திரு நாவுக்கரசர் காட்டும் எமது சைவநெறியின் தூயவழிக்கு புற நடையானவர். அவர்கள் உண்மையில் விளக்கமிலாதவர்.

உலகில் புண்ணியர் கைபூவும் நீரும் உண்டு என திருநாவுக்கரசர் சொல்லிடும் பொழுது இதை விளங்காது நான் பூசை புரிவதில் பூஷணம் என தன்னை கௌரவிப்பவன் அறிவுடைய மனிதன் எனக்கொள்ளலாமா?

புண்ணியராவார் பொன்னே புகழோ பட்டமோ பதவியோ பிரசாரமோபெருமையோ விரும்பதவர் அவர் வழி தெய்வ அருள் நாடல் பசித்தபோது ஓர் உணவு.

## நால்வர் வழிக்கு நாம் உயர்வோம்

இதன் அருகாமையில் தரப்பட்ட தேவாரத்தை தயவு செய்து படியுங்கள். மகாராசனுயினும் படித்துப் பாருங்கள். கலியுகத்தில் மகாராசனுக மதிக்கப் படுவார் எத்தனை மடங்கு பாவச் செயலுக்கு அதிபராக உள்ளவரோ அத்தகைய நிலையில் தான் அவர் அதிகாரத்தில் உயர்ந்து இருப்பார். இன்று எந்த ஒரு நாட்டின் அரசியல் தலைவரும் இந்த ஒரு நிலையில் நின்றும் விடுபட முடியாது, பாராண்ட தலைவர் அனைவரும் தமது தலைமைப்பதவியை எத்தனையோ கொலையின் பின்னரே பெற்றிருப்பார். அல்லது சமூகத்தை ஏழைகளை விபரமறியாத மக்களை தங்கள் அரசியல்செல்வாக்கிற்காக துயருறுத்தவைத்து தமது கட்சிமக்களுக்கு திருப்த்தி செய்து அவர் ஆதரவு பெற்று வாககுப்பெற்று தம் உயர்வை பேணிக்கெண்டவர். இன்னும இக்கலியுகத்தில் பெரய்மைக்குரிய வழிகளையே பேணிககொள்வார்கள்.

ஆற்றங்கரையில் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் என்று முன்னைப் பெரியோர் நிச்சயித்தனர். நாம இதனை இன்று அநுபவரீதியாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. உலகமக்களால் இவர் எம் தலைவர் என படலைக்குப்படலைகும்பம் வைத்து பூமாலை போட்டு வீதியூடு உலாப்போன மகாராசாக்கள் எல்லாம் கர்மிகளாகி பெரும்துயரப் பாட்டுடன் தன்தேசத்து இலாது பிறதேசம் போய் இறந்தவர் உண்டு. இத்தகையோரை திருமூலர்பெருமான் தமது திருமந்திரம ஒன்றில்

நாட்டுக்குநம்பி நம் ஊர் தலைமகன் காட்டுச்சிவிகை (பாடை) ஒன்று ஏறி நாட்டார்கள் பின் செல்ல முன்னே பறை கொட்ட நாட்டுக்கு நம்பி நடக்கி என்ற வாறு'

எனச்சொல்கின்றார் ஒருபாடலில். அதாவது நாட்டிற்கு தலைவராய் இருந்தவர் அவர் சவப்பெட்டிக்குள் வைத்து பாடையில் ஏற்றப்பட்டு முன்னுல் பறைமேளம் அடிக்க பின்னுல் ஊர் மக்கள் செல் அவர் போற போக்கை பாருங்கள் என்கின்றார்.

இந்த ஒரு தன்மையில் சுந்தரமூர்த்திசுவாமிகளும் ஓர் வேடிக்கை தம் பாடலில் சொல்கின்றார். அது தான் ''செத்த போதினில் முன் நின்று நம்மை சிலர் கூடிச் சிரிப்பதன் முன்னம்வைத்த சிந்தை உண்டே மனம் உண்டே வாழ் நாள் மேல் செல்லும் வஞ்சனை உண்டே'' என்பதாக உளது. இதைச் சிந்திக்க வேண்டும். சிந்தித்து தெளிய வேண்டும். செத்தால் வந்து கூடி நின்று சிரிப்பது இயல்பு. ஒருவர் இருவர் நெருங்கிய பந்துகள் அழலாம். மறையோர் கூடிச் சிரிப்பார்கள். இன்று செத்தவீடுகளில் அரசியல் கதையும் கதைத்திட வசதியான இடமாகவும் உளது!

இது ஒருபுறமாக யோககசுவாமிகள் ஒரு நாள் என்னைபார்த்து நல்லூரரைக் கும்பிட்டவரும் செத்தவர் தானே! இதை நீ சிந்திப்பாயோ எனக்கேட்டது. அரசியல் வாதயும் பிரபல வழக்கறியனுருமான ஒருவர் எத்தனையோ கொலைக்கேசில் ஏற்பட்டு கொலைசெய்தாரை தண்டனை பெருது மீட்டெடுத்துக் கொடுத்தவர். அவர் சாமர்த்தியம் அளப்பரியது. அவர் பாராளுமன்ற அங்கத்தவராகி மந்திரியுமானவர். அவர் கொலையுண்டவர்க்கு சாட்சிசொல்லவந்தவர் கோட்டில் கண்ணிர்விட்டுக்கலங்கும் படி குறுக்கு விசாரணை செய்து தம் கட்சிக்கு வாதாடி வெற்றி காண்பவர். அத்தகைய வீரர் நல்லூர்க் கந்தசாமிக்கு வருடாவருடம் சங்காபிஷேகம் செய்பவர். ஆனுல் அவர் தான் பிறந்த ஊரில் சாகாமல் வேறு தேசம் சென்று இறக்கவேண்டி வந்தது. ஆகவே பெரியோர் பலரும் நாம் படித்தோம் வீராராளுேம் என்பதை விடுத்து இன்னமும கற்றல் நன்று அதில் தவறில்லை.

வள்ளுவர் கல்வியால் பெறும் பயன்யாது என்றால் இறைவனது திருவடிகளைத் தொழுது கொள்ளலாகும் என்றதோடு அமையாது கற்று உணர்ந்து கற்றவைக்கு ஏறறவாறு நிற்றல் ஒருவரின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தான் பூவோடு நீர் சுமந்து ஏத்தும் புண்ணியர் அவர் வழியை பற்றுவேன் நான் என்று நாவுக்கரசர் பெருமான் நம்மை உண்மை வழிக்கு தம் பாடல் மூலம் வழிகாட்டுகின்றார்.

அடிக்கடி நாம் தீபத்தில் வலி உறுத்துவது இதைத்தான் தென் இந்தியா சினிமாவின் மூலம் சிவநெறியை பாழாக்கிவிட்டது. தென்இந்தியா பிரசாரகர் எவரும் சினிமாவின் வானொலியின் தொடர் புடையோர் தூய்மை இல்லாதவர். யாழ்பணத்து மக்களே அவர் வழி ஆபத்தானது. அது வேண்டாம் எனச்சொன்னேம் இலங்கையிலும் பட்டத்துடன் விளங்கும் பெண்ணோ ஆணோ யாவரும் சிவநெறியின் தூய்மை இல்லாதவர். அந்தணராய் இருந்தாலும் பட்டம் பெற்று உயர்வு கௌரவிக்கும் பேதைப் பிரமணரை நாம் வேறு என் சொல்லலாம். பட்டமுடைய எந்த ஒரு பிராமணரோ பெண்ணோ ஆணோ யாரும் கீழ்மைப்பட்டவர் உண்மை வழிக்கு அருகதை யாகாதவர் இந்தப் பேதை மக்களைப் போற்றுமிலேச்ச நெறிப்பேதையரை போல் சைவநெறிக்கு தீங்கிழைத்தார் வேறுயாருமிலர் ரனைரும் பட்டபளிப்பில் மினைக்கெடும் பாதகராகும் வித்துவான்களால் பண்டிதரால் பண்டிதையால் உயர்வான பூவோடு நீர்சுமந்து போற்றும் புண்ணியச்செய்கையின் தூய வழிகள் அனைத்தும் மாசு படுத்தப்பட்டன. இவர்களால் வருங்கால சந்ததியார் எவருமே இனி பூவும் நீரும் கொண்டு போற்றும் புண்ணியச் செய்கை குறைந்து ஒலிபெருக்கி வனொலி இவை போன்ற இயந்திரகருவிகளின் மூலம் வழிபடல் பெரிது எனக் கொள்ளப் போகின்றார்.

சங்கராச்சாரியர் முதல் எவரும் இந்த உண்மைப் பொருளான பூவோடுநீர் சுமந்து தேத்தும் புண்ணியச் செய்கையே மேலானது எனக்கொள்கின்றார். திருஞானசம்பந்தப் பெருமானை "திராவிடசிசு'' சிவத்தின் தமிழ் குழந்தை எனச் சொல்ல அந்த வாக்கியத்தையும் ஏற்காது எத்தனையோ வாய் வேதாந்திகள் தாங்கள் கணக்கப்படித்து விட்டோம் என்று மிக மிக மேலான மேடைப் பிரசங்கம் செய்கிறார்.

இந்த வாய் வேதாந்திகள் பூவொடு நீர் சுமந்தேத்தும் புண்ணியரின் புறங்காலின் தூசிற்கு கூட காணாது,

இன்று எமது யாழ்ப்பாண நாட்டில் எந்த ஒரு கோவிலிலாதல் பூவொடு நீருக்கு முதன்மை கொடுப்பவரைக் காணோம். இதற்கு சான்றாக எந்த ஒரு கோவிலில் ஒழுங்கான ஒரு பூந்தோட்டம் இருக்கின்றது. யாரேனும் காட்ட வல்லீரோ? இலட்சம் இலட்சம் ரூபாவில் தேர் கோபுரம் கும்பாபிஷேகம் ஆனால் ஒரு கோவிலில் ஓர் நந்தவனம் எங்கிருக்கின்றது? நல்லூரிலாதல்? சிறந்த ஒரு நந்தவனம உண்டா? திருக்கேதீச்சரத்தில்?

அடுத்து பூவெடுத்து மாலை கட்டி சுவாமிக்கு அணியக் கொடுக்கும் அந்தப் புண்ணியத் தொண்டு இன்று பூமாலை கட்டுவார்க்கும் பொன்னுடை போர்ப்பதென்றால் பூமாலைப் பூஷணம் என்று பட்டம் கொடுத்து புகைப்படமும் வியாபாரியளின் விளம்பரம் பிரசுரிக்கும் பேப்பரில் போடுவதென்றால் சவுக்கார முதலாளி முதல் பல பேரும் சலூற் அடிப்பதென்றால் யாரும் பூமாலை கட்டிட சம்மதிப்பார் என நம்புகிறேன்.

நீங்கள் உய்ய சைவ நன்நெறி உய்ய எம் யாழ்ப்பாண மக்கள் அனைவரும் வாழ திருநாவுக்கரசர் பெருமானின் சிவநெறியின் தூய்மைக் கருத்து நிரம்பிய அட்பாடலைக் கீழே தருகின்றேன். திருநாவுக்கரசர் பெருமான் இப்பாடலைப் பாடியருளிய வரலாற்றை புது பெரியபுராணப் பதிப்பு பாகம் 3 பக்கம் [707] ல் காண்க.

திருச்சிற்றம்பலம்

**மாதர்ப்பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

தேய்ந்து நின்ற பிறையின் கண்ணி அருளால் சூடியவனை மலையரசன் புத்திரியான பார்வதி அம்மையுடன் சேர என் மனமுவந்து பாடி; பூவும் நீரும் சுமந்து போற்றி அவர் திருவடி சரண் புகுவார் அவர் பின்னாக நான் சென்று அபயம் புகுவேன்; அவ்வாறாக யான் யாதும் ஒரு சுவடும் நிலத்தில் படாதபடி அருள் வசத்தால் திருவையாறு வந்து சேரும் போது காதலுடைய மடம் எனும் குணமுடைய பெண் யானையுடன் ஆண்யானையுமாக கூடி வருவன கண்டேன். இக்காட்சி முன் ஒரு போதும் காணு வகையாக கண்டு அவர் திருப்பாதமே அற்புதமாக அவ் வடிவில் இருப்பக் கண்டேன், இவை முன் நான் கண்டறியாத வகையாகக் கண்டேன்.

திருக்கைலாயக் காட்சி காணவிரும்பிய திருநாவுக்கரசர்க்கு திருவையாற்றில் அக்காட்சி காட்டப் பெற்றது. அங்கு காணப்பெறுவதெல்லாம் சத்தியும் சிவமுமாம் தன்மையாக இருக்கின்றது. ஆநந்தமாக இருக்கின்றது. தூய அருள் வடிவாக இருக்கின்றது எந்த உயிரினமும் ஆணும் பெண்ணுமாக இணைந்திருக்கின்றன. அன்பால் குளிர்ந்து மலர்ந்து விளங்குதலைக் காணுகின்றார். முன்பெல்லாம் இம்மிருகங்கள் பறவைகளைக் கண்டிருப்பார். ஆனால் இன்று அவற்றின் நிலை வேறாகியது. இன்று அவை காணும் போது அவற்றின் மலர்ச்சியில் அன்புருவமாம்சிவமே காணப்படுகிறது; ஆனமையால் இக்காட்சி முன் காணு காட்சியாக இருக்கின்றது. திருவையாற்றில் நிற்பனவும் சஞ்சாரம் செய்வனவுமான எவ்வகை உயிரும் சிவமும் சத்தியுமாகவே விளங்குகின்றன. ஆனதில் இவை போல் முன் நான் கண்டறியாதன கண்டேன் என்கின்றார். 1

**போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி**
**வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்**
**ஆழி வலவ னின் றேத்தும் ஐயா றடைகின்ற போது**
**கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்**
**கண்டே னவர்திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

அழகிய இளம் கண்ணிகளின் மாலையணிந்த பெருமானை, பூப்போலும் பட்டுடுத்திய பெருமாட்டி அவளுடன் பாடி; நீங்கள் குன்றாது அழகுடன் வாழுங்கள் எனப் போற்றி வட்டணையாக ஆடி பாடி வருவேனுக்கு; சக்கரப்படை கையில்வைத்த விஷ்ணு நின்று போற்றிடும் திருவையாறு வந்து சேரும் பொழுதல் என்ன அற்புதம் சேவல் கோழி பேடுடன் கூடி குளிர்ந்த வருவதலைக் கண்டேன்! இவை அவரின் திருப்பாதமாக இருப்பக் கண்டேன் இது கண்டறியாத வகையாகக் கண்டேன். யான் தேடிக் கண்டேன் அல்லன் அருளால் கண்டு கொண்டேன்என்றதால் கண்டறி யாதன கண்டு கொண்டேன் என்றார். இயல்பாக அறியும் அறிவாய் இது அறியமுடியாதாய் இருந்தமையால் கண்டறியாதன கண்டேன் என்றவாறு. கோழியும் பேடுமோ சத்தியும் சிவமுமோ எனப் பிரித்தறியா வகை நின்றமையால் தெரிந்தறிய பிரித்தறிய முடியா வகை ஆனந்தமாகஅக்காட்சி அமைந்தது. 2

தகுதி என மொழிகின்றார். ஆகவே கல்வி மூலம் மேன்மை உற்றாலும் மகராசனாயினும் கல்லூரிஅதிபராயினும் வேறு பிரபல்லயமுடைய யாராயினும் எழுத்தாளனாயினும் எவரும் நாம் பின்பற்றி ஒழுகுவதற்கு தகுதி உடையாரோ என்றால் அதனை அவரவர் எச்சம் (அவருடைய பெறு பேறு) அதனால் அறியப்படும் என வள்ளுவர் சொல்கின்றார்.

மேல் செல்லிய வாறு மேன்மை யாளராக கல்வி மானாக அரசியல் தலைவராக: செல்வந்தராக நாட்டிற்கு சேவை புரிந்த நலமுடையோராக இருக்கும் யாரும் அவர் இறந்தபோது என்னானர் என்பது தான் எச்சம் எனக் கொள்ளும்படி நின்றது. இறந்த பின்பு நாலுமைல் நீள பிரேத ஊர்வலத்தில் மக்கள் கலந்து கொள்ளலாம்.

ஆனால்அந்த ஊர்வலத்தில் மக்கள் கலந்து கொண்ட தொகை பற்றிய சிறப்பால் ஊர்மக்கள் செய்த மதிப்பால் இறந்தபின் இரங்கல் கூட்டம் சில நினைவு மண்டபம் எடுக்கப்படும் சிறப்பாலும் அத்தகையோரை பெரியவர் என்று கொள்ள முடியாது என்பதை திருமூலர் தமது பாடல் மூலம் மேலே நிராகரிக்கின்றா. அவரால் பயன் இல்லை. ஏன் என்றால் இறந்த பின் அவர் என்னானர் என்பது தெரியப்படாதே உளது. அது பாராட்டுடன் முடிவது.

இதனைக் கூறிய திருமூலர் பின்னர் வலி உறுதி எமக்குச் சொல்வது யாதெனின்.

''தேவர் பெருமானைத் திவ்விய மூர்த்தியை யாவரெனினும் ஒது மின் கேண்மின் உணர்மின் உணர்ந்த பின் ஒதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே''

என்றதாக, இதனைச் சிந்தித்து நாங்கள் தெளிந்தால் இதன் தாற்பரியம் நன்கு புலப்படுகிறது. இப்படியாக உலகம் நிலையாமை உடையது. எந்த மகாராசனாக இருப்பார்க்கும் நிலையாமை உள்ளதே யாகும். அவரவர் அநுபவிக்கும் இன்பங்களுக்கு ஏற்ற துன்பம் வந்தே தீரும். அதை நீக்க எவராலும் முடியாது. அந்த இன்பத்திற்கு ஏற்ற துன்பத்தைக் கடவுளே தருகின்ற பொழுது அங்கு ஏற்றத்தாழ்வு பாரபட்சம் காண்பிக்க முடியாது? அது எல்லார்க்கும் பொதுவானது. இந்த நிலையாமையை உணர்ந்து கொண்டு நீர் யாவராயிருந்தாலும் ஒதுங்கள். எனக்கு இது இப்ப தேள்வையில்லை என்று விடாதீர் நமக்கு இதெதற்கு மேலும் தெரியும் என்று அகங்காரம் கொள்ளாது ஒதுங்கள். அது மட்டன்றி மெய்யடியார் ஒதியதை ஓதக்கேளுங்கள். ஓதிய இனிமைக்கு தலை அசைக்காது என்ன அப்பாடலில் ஓதப்பெற்றது என்பதை உணருங்கள். அவ்வாறு ஓதி; ஓதக்கேட்டு உணர்ந்து கொண்டோர் ஓங்கி நின்றார் என்கின்றார்.

அருகே தரப்பட்ட திருநாவுக்கரசர் பெருமானது தேவாரத்தை ஓதி உணரப்போனால் திருநாவுக்கரசர் எதை வாழ்வில் விரும்பினார் அதைப் பெற எப்படி நடந்தார் நடந்த அவர் என் பெற்றார் என்பது அவர் பாடல் மூலம் நாம் நன்கு சிந்தித்து தெளியலாம்.

இதைத்தான் திருமூலர் பெருமானும் ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே! எனக் கூறி ஓதி உணர்ந்து அதன் உண்மை வழி ஒழுகி பெற முடியாத காட்சியைப் பெறுவார் ஓதி உணர்பவர் என்றதால் ஓதி உணர்ந்தவர் ஓங்சி நின்றார் என்றனர்.

இதை நாம் சிந்தையில் கொள்வோம். நாவுக்கரசர் பெருமானது பாடலை அவதானித்தால் திருவையாற்றில் தான் பெற்ற காட்சி சத்தியும் சிவமுமாக நிலவிய திருக்கூத்தாகவே இருந்தது. இதுவே மன்றில் திருநடனம் எனவும் சொல்லலாம். இந்த நடனம் கண்டால் பிறப்பில்லை இறப்புமில்லை என்று திருமூலர் சொல்கின்றார். அவர் தம் திருமந்திரத்தில்.

''மன்றில் நடம் கண்டபின் எண்ணிலி கோடியுகம் இருந்தேனே!

என்ற வகையாகச் சொல்கின்ற போது அதன் தாற்பரியத்தை நாம் சிந்திக்க வேண்டும். இவை உபசாரவார்த்தை அன்று உண்மையானவையே. ஆகவே இந்தக் கூத்தின் தரிசனம் மரணத்தை வெல்கின்றது. என்றும் உணர்வுடன் இருக்கும் பேறு தரப்படுகின்றது;

இந்த உடம்புடன் இருக்கும் அதே இயல்பில் உடம்பை விடுத்த பின்பும் இயங்கும் நிலை தான் மரணத்தை வென்றதாகும்.

திருநாவுக்கரசர் தமது திருப்பதிகம் ஒன்றில் ''சாவாமே காத்து என்னைஆண்டாய் போற்றி'' என்கின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரிடத்து; ''சாதலும் பிறத்தலும் தவிர்த்து எனை வகுத்து தண் அருள் தந்த தலைவனை' என் கின்றார். மணிவாசகர் ஒரிடத்து 'துன்பமே பிறப்பே இறப்போடு மயக்காகும் தொடக்கு எல்லாம் அறுத்த நற்சோதி' என்கின்றார். திருஞானசம்பந்தர் ஒடத்து ''பவன மாய்ச் சேடையாய் நா எழாத நிலையில் பஞ் சில் பால் தோய்த்து நாக்கில் தடவிட மெல்ல விழுங்கி மிடறடைப்ப மரணிக்கும் பேதையர் போல் நாம் இல்லை. நாம் இற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எரிப்பிறைக் கண்ணியி ஞனை யேந்திழை யாளொடும் பாடி**
**முரித்த இலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்**
**அரித்தொ ழுகும்வெள் அருவி ஐயாறு அடைகின்ற போது**
**வரிக்குயில் பேடையொடு ஆடி வைகி வருவன கண்டேன்**
**கண்டே னவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

நெருப்பினைப் போன்ற ஒளியுடைய பிறையினைச் சூடிய பெருமானை மையம்மை அவளுடன் கூடிப் பாடி கையால் இடையிட்டு ஒற்றிப் பாடிடும் தாளங்கள் போட்டு முகமலர்ந்து ஆடி வருவேனுக்கு கரையினை அரித்து ஓடும் வெள்ளை அருவிகள் நிறைந்த திருவையாற்றை அடைகின்றபோது என்னே அற்புதம் வரியுடைய குயில்தன் பேடுடன் மகிழ்ந்தாடி தங்கி நின்று வருவன கண்டேன். இக்காட்சியில் அவர் திருப்பாதமே கண்டேன். முன்னர் கண்டறியாத அத்புதமான காட்சிகளாக அமையக் கண்டேன். 3

**பிறையிளங் கண்ணியி ஞனைப்பெய்வளை யாளொடும் பாடித்**
**துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்**
**அறையிளம் பூங்குயி லாலும் ஐயா றடைகின்ற போது**
**சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்**
**கண்டே னவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்.**

பிறையின் இளமை குன்றாத கண்ணியை சடையிடத்து உடையானை; கை நிறைய அணிந்த வளையல்களுடைய கைகொண்ட உமையம்மையாருடன்பாடி; நல்ல பூந்தோட்டத்தில் பெற்ற இளமையின் செவ்வி உடைய பலமலர் சொரிந்து வணங்கி என் தோள்கள் குளிரும்படி அப்பனைத் தொழு தெழுவேன்; கூச்சலிடும் இளமை உடைய அழகிய குயில் பாடும் திருவையாற்றை வந்து அடைகின்ற போது இளமையின் சிறகுடைய பெண்பறவையுடன் ஆண்பறவைகள் ஆடி வருவன கண்டேன், சேவலும் பேடுமாக வரும் ஆநந்த ஆட்டத்தில் அவரது திருப் பாதமே தோன்றியருளக் கண்டேன். இவ்வாற்றால் கண்டறியாத காட்சிகள் கண்டேன்.

**ஏடு மதிக்கண்ணி யானை ஏந்திழை யாளொடும் பாடிக்**
**காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்**
**ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது**
**பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்துவருவன கண்டேன்**
**கண்டேனவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்**

அழகிய இதழ் உடைய வாசமலர் போல் சிறந்த இளம் பிறைக் கண்ணி உடையபெருமானை உமை யம்மை யாருடன் சேரப்பாடி. காடும் நாடும் மலையும் எங்கும் காணும் படி கைதொழுது ஆடிப்பாடி வருவேன் எம்பிரான்திருநடனம் புரிந்தருள் கின்ற திருவையாற்றினை வந்து அடைகின்ற போதுபேடை(பேடு மயில் சேவலுடன் பிணைந்து இன்புற்று வருவன கண்டேன். அந்த இன்பநிலையாவும் எம்பிரான் அன்பில் திளைத்தவாறு இருக்கக் கண்டேன். அன்பே சிவமாக அருளே வடிவாக அவையாவும் மெய்மறந்து அனைவரும்காட்சியில் சிவமும் சத்தியுமாய தன்மையாகக் கண்டேன்; இதுவே அவர் திருப்பாதம் எனக் கண்டேன்; கண்டறியாத காட்சி இன்று கண்டேன்.

**தண்மதிக் கண்ணியி ஞனைத் தையல்நல் லாளொடும் பாடி**
**உண்மெலி சிந்தைய ஞகி உணராஉருகா வருவேன்**
**அண்ண லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது**
**வண்ணப் பகன்றி லொடாடி வைகி வருவன கண்டேன்**
**கண்டேனவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்**

குளிர்ந்த பிறையின் கண்ணி உடைய பெருமானை பெண்களில் நல்லவளாய பெருமாட்டி உமையம்மையுடன் பாடி இன்னும் காணேனே என உள்ளத்து மெலிவுற்ற சிந்தையுடன் அவரை உணர்ந்து உருகி வருவேன் நான்; எம்பிரான் அமர்ந்து என்றும் இருக்கின்ற திருவையாறு அடைகின்ற போது அழகிய அன்றில் பறவைகள் இணைபிரியாத அன்புடன் ஆடிவருகின்ற அற்புதம் கண்டேன். இந்த ஆணும் பெண்ணும் ஒன்றி உருகிய அன்பு நிலையில் சிவனருளாகக் கண்டேன். அவர் திருப்பாதம் இவ்வாறு கண்டேன். கண்டறியாத காட்சி எல்லாம் கண்டேன்.

அன்றில் பறவைகள் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திருக்காது. பிரிந்தால் கதறும். இந்த அன்பிணைப்பில் இருந்தன இவையும் ஆடிக் கொண்டு மெய்மறந்திருந்தன. சித்தம் ஒன்றிய அன்புருவில் சிவமாக இருந்தன. இது கண்டறியாத காட்சியே. சொல்ல முடியாதது. கற்பனைக்கு எட்டாதது என்றதால் கண்டறியாதது என்றதாகும்.

இந்த நிலையில் கணவன் மாருடன் சிங்கம் போல் பாயும் சைவமங்கையரும் நல்ல பத்தினிகளை வதைக்கும் பாவிகளும் திருநீறு குறி எழுதி கோலாகலமுடன் திரிகிறார். இவர்கட்கு இது எல்லாம் அந்தக் காலம் என்பார்கள். இப்ப எல்லாம் கோயிலில் கலியாணம் 4வது மாதத்திற்கு மேல் கோட்டில் பிரிவு விண்ணப்பம். இதனை சைவமங்கையர் கழகங்கள் உணருமோ?

திருநாவுக்கரசர் திருவையாற்றில் காணப்படும் பறவைகள் மிருகங்கள் எல்லாம் அன்பில் இணைந்த தெய்வ அம்சமாக சிவன் வடிவாக குளிர்ந்து மலர்ந்து இன்புற்று இருக்கக் கண்டதாகச் சொல்கின்றார். ஆனால் மனிதரில் மட்டும் இந்த இன்பநிலை இருக்கக் காணவில்லை. ஒருகால் மனிதன் காதல் பேசுவது கருத்தடை பாவிப்பது கோட்டில் பிரிவது ஒன்றுக்கு மேல் இருபத்தைந்து வரை சோடி தேடுவான் என்றதாலோ என்னவோ இதற்கு காரணம் தெரியவில்லை.? பிரசாரகரே வித்துவான்களே பிராமணக் குருக்களே சைவ அம்மாக்களே இதற்கு விளக்கம் தரமுடியுமோ? 6

**கடிமதிக் கண்ணியி ஞனைக் காரிகை யாளொடும் பாடி**
**வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வேன்**
**அடியிணை ஆர்க்குங் கழலான் ஐயா றடைகின்ற போது**
**இடிகுர லன்னதொர் ஏனம் இசைந்து வருவன கண்டேன்**
**கண்டேனவர் திப்ருபாதங் கண் டறியாதன கண்டேன்**

வாசனை கொண்ட இளம் பிறைக் கண்ணி உடைய பெருமானை அருள் வடிவான அழகிய பெண் உமையம்மையுடன் கூட்டப்பாடி அவரின் வடிவோடு வண்ணங்கள் இவை இரண்டினையும் என்வாய் வேண்டிய அளவிற்கு சொல்லிப்பாடுவேன் திருப்பாதத்து அணிந்த கிலம்பு ஒலிக்கும் திருவடி உடைய பெருமான் அமர்ந்த திருவையாற்றினை நான் வந்து சேர்கின்றபோது இடியை ஒத்த பெருங்குரலுடைய பன்றிகள் ஆணும் பெண்ணுமாக அன்பில் இசைந்துவருகின்றதைக் கண்டேன், நான் அவரின் திருப்பாதம் அவற்றின் உருவில் திகழக்கண்டேன். அவர் திருவடி இவ்வாறு கண்டறியாத காட்சியாக விளங்கிடக் கண்டேன். 7

**விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்**
**பெரும்புலர் காலையெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்**

வோம்' என்கின்றார் அருணகிரிநாதர் ஒரிடத்து "அவமே பிறந்த எனை இறவாமல் அன்பர்பணி அமுத ஆலயம் புகுத அருள்வேரனே!

எனவே தமது திருப்புகழில் பாடுகின்றார்; ஆகவே இத்தகைய பெரியோர் யாவரும் மரணத்தை வென்றவர்கள் என்பது அவரவர் திருவாக்கால் பெறுகின்றோம் இவர் இந்த உடம்புடனே சிவரூபம் அடைந்தவர்,

இது இப்படியாக இருப்ப இவர்பாடலை நாம் ஓதுதலாலும் அவா காட்டும் நல்ல நெறிகளைக் கடைப்பிடித்தலாலுமே நாம் உய்தி அடையலாம் அதுவன்றி வேறு ஏதுமே வழியில்லை, இன்றுள்ள மிலேச்ச நாகரீகத்து ஊறி நிற்கும் எந்தச்சாமியும் மரணத்தை, வென்றவர் அல்ல. அல்லது வெல்லப்போறவரும் அன்று

மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் என்றது போல் காதுக்கு இனிமையாகப் பாடும் நெறியிலாருடைய பேச்சு உங்களுக்கு எக்காலமே நலன் தராது அது வன்றி ஏதும் பிரயோசனமும் தராது. சினிமா வானொலி இவை மூலம் அநுபவிக்கப்படும் எந்தவிதமான தெய்வப்பாடலும் உங்கட்கு என்றுமே பயன் தராது. உண்மைப் பொருளை உண்மைவழி நடப்பவரிடம் கேட்கும் போது தான் உண்மைப் பொருள் உங்கட்கு உறுதியான பயனை வருவிக்கும். அதல்லாது பொய்யைப் பெருக்கும் பொய்யர் சொல்லும் உண்மையும் அதுவும் பொய்யாகிவிடும். இன்று ஒவ்வொரு வீட்டிலும்வானொலிப்பெட்டி சினிமாப்பாடலையே கேட்க வைக்கின்றது. அது முருகன் மேல்பாடிய பாடலாயினும் சினிமாவில் பாடியவுடன் பொய்யே! அது பயன் தராத மயக்கமே!

இந்த ஒரு உண்மை எந்த அறிவாளிக்கும் இது நன்கு தெளிவுபட வேண்டும். உண்மையைச் சொல்லப்போனால் வசதி இருந்தும் வானொலிப் பெட்டி இலாத வீடு புண்ணியர் வாழும் வீடென்று நாம் சொல்வோம். ஏன் என்றால் இன்று இந்த வானொலிப் பெட்டி மூலம் பெறப்படும் சினிமாப் பாடலினால் விளையக்கூடிய விபரீதங்கட்கு அளவே இல்லை.

சும்மா இருக்கும் வயோதி பலரையும் காம உணர்விற்கு தூண்டும் வகை சில சினிமாப் பாடல் தினந்தோறும் போடப்படுகிறது. அயலில் ஒருவரும் அமைதியாக தமது சித்தத்தை ஒருமைப் பாட்டுடன் வைத்திருக்க முடியாத வகை குழப்பம் செய்கின்றன நாம் விரும்பாவிட்டாலும் நமது அயலில் உள்ளவர் தாம் விரும்பி வானொலிப் பெட்டியை உரத்த சத்தத்துடன் போடுகிறார்கள். நாம் என் செய்யலாம் யாரிடம் இதைச் சொல்வது. 64 வது அடியவரே வானொலியில் தமது பிரசங்கத்தை வாட்டுகிறார். தனது நண்பர்களுடன் இட்டலிவிருந்து கொண்டாடுகிறார் படத்தில் நண்பருடன் போஸ் கொடுக்கிறார். இவருக்கு நால்வரது நெறியில் அணுவளவு விளங்குமோ? விளங்கி இருந்தால் அவர் இப்படி நடப்பாரோ? தயவுசெய்து யாரேனும் பதில் தருவீரோ? அப்படியாக முழுக்க உலக இன்பத்துறையில் மூழ்கும் ஒருவர் நல்ல வடிவாகப் பிரசங்கம் செய்கின்றார் என்றால் நாம் அவரை 64வது அடியவர் என்று சொன்னால் இந்த நாட்டில் எவ்வளவு பழி பெருகும் என அறிவுடையீர் சிந்திப்பீரோ.

உண்மையில் வானொலி சினிமா பத்திரிகை விளம்பரம் இவையாவும் நால்வர் கையாண்ட வழிகள் அன்று நால்வருடைய அந்தவழியை சிந்திக்கப் போனால் அதனை விளக்கிக் காட்ட எனக்கு சொற்கள் அமைகின்றனவில்லை.

ஓர் அளவிற்கு இன்றைய உலகில் வானொலிசினிமா பத்திரிகைப் பிரபல்யம் இவற்றுனில் அழுந்தாது கலவாது முகமன் பாராது எவ்வுயிரும் தன் உயிர் போல் எண்ணிக் கொள்ளும் அடக்கமுடைய உத்தமர்க்கே நால்வர் நெறியின் சீலம் விளங்கிடும் இதனை இலாது உலகத்து ப்ரபல்யமடைந்த பாட்டுக்காரரோ பிரசங்கியாரோ நால்வர் வழியை ஒருபோதும் அறியார் என்பதுசெல்லத் தேள்வை இல்லை.

நால்வர் வழியில் பிரதானமானவைபத்திமையும் அடிமையுமாகும். இவை இரண்டும் முக்கிய அம்சம். பத்தியால் பரவுதல் எம் பெருமக்கள் அவா யாவரிலும் காணலாகும் அடிமைத்திறம் பற்றி சிறிது ஆராய்வாம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் இதனை மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே, எனச்சொல்லிய பின்னர் எம் பிரானை உனக்கு இப்பிறப்பில் அன்றி ஏழுபிறப்பும் நான் அடிமை அதுவன்றி அடியார்க்கு அடியவனுவேன் என்கின்றார் இந்தக் கருத்தை அப்பர் சுவாமிகள் தமது பாடல் ஒன்றில் தான் பெரிய புண்ணியப்பேறு உடையவன் என்பதைதொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே எனக்கூறியருளி இத்தகைய புண்ணியப் பேறு எவ்வாறு தனக்கு எய்தியது என உளம் மலர்கின்றார்.

தொண்டர்களை மதித்தல் புண்ணியம். தொண்டர்க்கு சேவை செய்தல் புண்ணியத்தின் விளைவுகளாகும்: பாவிகளால் ஒருபோதும் புண்ணியத்தின் விளைவுடைய சிவனடியாரை மதித்திடும் நிலை வராது. ஊன் பொருந்திய உடலுக்கு இரை தேடி உழன்று உலகில் தடுமாறி அவர் பெரியர் இவர் சிறியர் என இரண்டாடும் பேதையர் யாவரும் பாவிகளே!

ஆகவே புண்ணியமுடையோரால் தான் புண்ணியராம் சிவனடியாரைப் போற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருங்கலம் பொன்மணி யுந்தும் ஐயா றடைகின்ற போது
## கருங்கலை பேடையொ டாடிக்கலந்து வருவனகண்டேன்
## கண்டேனவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்

உள்ளம் விரும்பும் பிறையின் கண்ணிதரித்த பெருமானை மெல்லிய இயல்புடைய பெருமாட்டியுடன், பாடியருளி அதிகாலை (4 மணிக்கு முன் என்றதால் பெரும்புலர் காலைஎன்றுர்) யில் [எழுந்து] நான் பெறக்கூடிய மலர் கொய்து அவன் திருவடியில் இட்டு வழிபட்டுவருவேன்; [அழகிய] பொன்னும் மணிகளும் கரையில் சேர்க்கும்] திருவையாற்றை அடைகின்ற போது அழகிய கலைமான் தன் பெண் மானுடன் ஆடிக்கலந்து கூடி வரக்கண்டேன். இந்த அன்புருவில் கலந்த இன்பத்தில் அவரது திருப்பாதம் விளங்கக் கண்டேன். கண்டறியாத காட்சிகள் கண்டேன்.

ஐயாறு என்றபெயர் ஐந்து ஆறுகள்இருப்பதால் எனப்பொருள் கொள்வர். சோதியான சிவம் இங்கு அகலாது உறைகின்றது என்பதும் இவர் வேறு பாடல் மூலம் வெளிப்படுத்து கின்றுர். 8

## முற்பிறைக் கண்ணியி னானை மொய்குழ லாளொடும் பாடிப்
## பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியும் ஆடா வருவேன்
## அற்றருள் பெற்றுநின்றுரோடையா றடைகின்ற போது
## நற்றுணைப் பேடையொடாடி நாரை வருவனகண்டேன்
## கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்

பிறை தோன்றி வளர தேய தேய்ந்து வந்து நிற்ப எதற்கும் முதல் பிறையான கண்ணி உடைய பெருமானை வாசனை கொண்ட கூந்தலுடைய உமையம்மையாருடன் பாடி என்னைப்பற்றிய பற்றுக்களை அறுக்கமாட்டாது அவ்வணமே பாடியும் ஆடியும் வருவேனுக்கு எல்லாச் செயலும் அற்று அருள் பெற்று நின்ற அடியாருடன் திருவையாற்றை வந்து அடைகின்றபோது. தனது நல்ல துணையான பேடுடன் கூடி மகிழ்ந்து ஆடிக்கொண்டு நாரை வருகின்றமை கண்டேன். இவ்வாறுக அன்பின் பிணைப்பில் ஆநந்தத்தில் ஆடிடும் அவையாவும் சத்தியும் சிவமுமாக கைலையில் இருந்த கோலமே ஆயது. அதுவாக அவர் திருப்பாதங் கண்டேன் கண்டறியாத காட்சி பல கண்டேன். 9

## திங்கள் மதிக்கண்ணியானைத் தேமொழி யாளொடும் பாடி
## எங்கருள் நல்குங்கொ லெந்தை எனக்கினி யென்று வருவேன்
## அங்கிள மங்கைய ராடும் ஐயா றடைகின்ற போது
## பைங்கிளி பேடையொ டாடிப் பரந்து வருவன கண்டேன்
## கண்டேனவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்

சந்திரனின் பிறைக் கண்ணி சூடிய பெருமானை தேன் போலத் தித்திக்கும் உமையம்மையாளுடன் சேரப்பாடி என்று எங்கு எம்பிரான் அருள் கொடுப்பார் இனி எனக்கு என்று வருவேனுக்கு அந்த இளமங்கையர் ஆடிப்பாடிடும் திருவையாற்றை அடைகின்ற போது பசுமையான கிளி தனது பேடுடன் ஆடிப்பரந்து வருகின்றன கண்டேன். அவ்வகையாக அப்பெருமானுநடைய திருப்பாதங் கண்டேன் நான் கண்டறியாதன கண்டு கொண்டேன்.

மதிக்கண்ணி என்றது பூக்கள் கண்ணியாக இருந்து மலர்வதுபோன்று என்றும் அப்பிறை தேய்தல் வளர்தல் இரண்டும் இல்லாது வளர்தற் கேதுவாக அமைதலின் கண்ணி எனப்பட்டது. 10

## வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
## களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக்கின்றேன்
## அளவு படாதொ ரன்போடு ஐயா றடைகின்ற போது
## இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
## கண்டேனவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்

வளரும் பிறைக் கண்ணி அணிந்த பெருமானை வோர்ந்து அழகிய கூந்தலுடைய பிராட்டியுடன் சேரப்பாடிக் கொண்டு தீய செயலான களவுகள் கைப்படாது என் நினைவு தப்பாது கைலையில் இருந்தருளும் கோலம் காணுமாறு கடைக்கணித்து நின்றவன் அளவுபடாத தோர் அன்புடன் திருவையாற்றை அடைகின்ற போது இளய நற்குலத்து நாகு [பசு] அதனைத் தழுவி எருது வருவன கண்டேன். கண்டேன் அவர் திருப்பாதம் இது கண்டறியாத வகையாகக் கண்டுகொண்டேன்.

இவ்வாறு திருக்கைலாயம் சென்று தரிசிக்க விரும்பிய எண்ணத்துடன் வருகாகு நிற்பனவும் சரிப்பனவுமான எல்லாம் சத்தியும் சிவமுமான தன்மையாய் விளங்கிடக்கண்டு மனமகிழ்ந்து பரவசமாகி கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என ஆநந்தம் திளைத்திட மொழிந்த பாடல் இவையாகும்.

முடியும் மற்றையோர்க்கு அது முடியாது.

பாலம் பெருகப் பெருக பற்றும் பெருகப் பெருக பெண்களும் தமது சீலம் விடுத்து மிருகம் போல நடக்க முற்பட்டவுடன் உலகில் நல்லவற்றை உணரும் வாய்ப்புகள் அருகிப் போகின்றன.

இதனுலே தான் மனிதன் இந்த பாவ வலையில் சிக்குப்பட்டவுடன் ஒரு கணமேனும் புண்ணியத்தை நினைக்க முடியாதபடி இருக்கின்றுன்.

கோவிலில் ஒழுக்கமான நடத்தை பய பத்தி இவைகளை புண்ணிய வசமுடையாரால் தான் கடைப்பிடிக்க முடியும் இன்று கோவிலில் கலியாணம் செய்தல் பொருள் ஈட்டல் ஒலிபெருக்கி முதல் அனைத்தும் பாவிகளது செயலே. புண்ணியரது செயல் என்று சொல்ல முடியாது.

கோவிலில் பிரசங்கம் பாட்டுக்கச்சேரி வைத்து சனம் வரப்பண்ணி கண்டு மகிழும் பாவிகளின் செயலால் கோவில் வீதி எல்லாம் மலசலம் கழித்திடும் நிலை வந்திடுகின்றது. குருக்கள் ஒருவர் தம் கோவிலில் வீதியில் பாட்டுக்கச்சேரி பார்க்க வந்த மக்கள் மலசலம் கழித்திட்டார்கள் என கவலைப்படுகிறுர். ஆனல் பாட்டுக்காழி வாரு. எல்லோரும் ஆயத்தமாய் இருங்கள். என்று ஒலிபெருக்கியில் கோவில் இருப்பிடத்து விளம்பரம் செய்ய பார்த்திருந்தவர் இந்தக்குருக்கள். இவர் மனதில் ஐயோ இது எம்பெருமானுடைய இருப்பிடம் என கருதி அந்தந்த நிகழ்ச்சிகளை அந்தந்த முறைப்படி செய்விக்கத் தெரியாது போனுர். இத்தகைய குருக்களை நாம பாவிப் பிராமணர் என்று சொல்வதில் தவறேதும் இல்லை.

பொதுவாக அநேகமான பிராமணருக்கு கோவில் என்றுல் தங்கள் சீவியத்திற்கு வருவாய் தரும் இடம் என்றே கருதுகிறுர் ஒருக்கால் ஒரு செயல் கோயிலில் நடப்பது தகாது என சொல்லும் அதே குருக்கள் மறுபடி 1000 ரூபா ஆரும் தருவதாக இருந்தால் உடன் பிழை சரியாகின்றது. ஒலிபெருக்கியில் மந்திரம். ஓதுவது சரியில்லை என ஒருக்கால் சொன்ன குருக்கள் சிங்கப்பூரால் ஒலிபெருக்கி ஒன்று வந்தவுடன் அடிபாகப் போடுறு மந்திரமும் என்கின்றுர். இவரை பழிபெருக்கும் கல்லூரி அதிபரும் தேவாரம் ஒலிபெருக்கியில் சொல்ல ஆசைப்படும் பண்டிதரும் பலரும் ஐயருக்கு சபாஸ் போடுறுர். இவர்கள் அனைவரும் புண்ணியம் விளங்கிடாப் பாவிகளே.

பெரியபுராணத்தை நன்கு படித்து விளங்குவோமேயானுல் கோவிலில் எப்படி நாம் நடக்க வேண்டும் கோவிலை எப்படிப் பரிபாலிக்க வேண்டும் என்பது புலப்படும். ஆனல் பெரியபுராணத்தை ஆருக்குத் தேள் வை அதால் என்ன பிரயோசனம் என்று சில கல்லூரி அதிபரே நம்மிடம் நேரில் சொல்லியிருக்கின்றனர்.

எந்த ஒரு இளையனுக்கும் கோவில் இப்படி நடக்கக்கூடாது என தன் உள்வத்தில் விளங்கிடுவானே எனில் ஒருபோதும் அப்பிள்ளை தீங்கு நெறிக்குஉடைந்தையாாது ஆகவே நால்வர் சொல்வதை யாவரெனினும் உணர்ந்து அவர் வழிக்கு உயர்ந்தால் அன்றி சமயம் வளர்க்கமுடியாது.

# அருணகிரியார் கொண்ட அச்சமும் கவலையும் அதுதீர வேண்டும் வரமும்

அருணகிரியார் தம் திருப்புகழில் ஓர் நற்கருத்து தெரிவிக்கின்றுர். ''தலைவலி'' எனத் தொடங்கும் அப்பாடலின் கருத்து இதுவாகும். அப்பாடல் முருகனை நோக்கி செய்யும் விண்ணப்பமாக உளது. அதில் அவர் சொல்கின்றுர் முருகா உன்னை ஓர் வேண்டுதல் செய்கின்றேன்; அதுயாதாகும் என்றுல்; உலகில் பல நோய்கள் உண்டு, அவையாவன தலைவலி மருத்தீடு காயாசுவாதம் கண்நோய் சூலை காமாலை சோகை சுரம் வாதம் இப்படி எத்தனை எத்தனை உண்டு. இவையில் ஒன்று நமக்கு வந்தால் நான் அதனை நீக்க வழி தேடி அதற்குரிய வகை செய்வாரிடம் சென்று ஐயா இதைப் பரிகரித்து நீக்கும் மருந்துதாரும் என்றுல் நான் போன போக்கில் என் நிலை உணர்ந்த அவர் நான் சொல்வது தனக்கு கேட்காது போல் இருந்தபின் என்னைப் பார்த்து என்னப்பா உனக்கு என்ன செய்யுது என கையை பிடித்து பார்த்த பின் சரி நோய்முத்திப்போச்சு வயதும் முதிர்ந்து இந்த நிலையில் நான் மருந்து தர என்ன தருவாய் எனக்கேட்டால் நான் என் செய்வேன்: நானே பிச்சை எடுத்து உண்பவன். பிச்சையில் மிச்சம்பிடித்து பரியாரியாருக்கு பணம் கொடுப்பது எப்படி. நான் பரியாரியாருக்கு என்ன சொல்ல முடியும்? பேசாமல் ஐயா பிறகு வாறேன் என்றே சொல்லவேண்டிவரும். ஆதலால் முருகா என் நிலையைநீநன்குஉணர்பவன் அப்படியாக ஓர் வைத்தியரிடம் நான் சென்று கெஞ்சி நிற்கும் விதியை மட்டும் எனக்கு விதித்திடாதே!

அதற்கு பதிலாக உன்னிடம் ஒன்று வேண்டுகின்றேன். அதுதான்யாது என்றுல் இந்த உலகிலே அங்கு இங்கு ஓடி உலையாது அவர் இவர்என்று பாராது உலைவு அத்தனையும் நீங்கி சித்தம் ஒருமைப்பட்டு தூபதாகி அதிகாலை எழுந்து தாம் வைத்த பூந்தோட்டத்தை அடைந்து அந்தப் பூந்தோட்டத்தில் உள்ள வகை வகையான பூக்களைத் தெரிந்து எடுத்துவந்து ஓர் இடத்து இருந்து உனது திருவடியைத் தியானித்து அம்மலர்களை நாரில் சேர்த்து பிணைத்து மாலை கட்டி உனது திருவடிக[illegible] வழிபடும் புண்ணியர் திருவடிகளை நான் சென்றடைந்து அவர்க்கு தொண்டு செய்துவரு வாழ்வை தந்து நிற்பையேல் அது போதுமானது. முருகா;சரவணு, காத்திகை மைந்தா கடவுளே இதுவே இரந்தேன். இந்தவாழ்வு அமைந்தால் ஒரு நோயுமென்னைச்சாராது எனும் நம்பிக்கை கொண்டேன்.

இப்படியாக அருணகிரியார் பூவும் நீரும் கொண்டு போற்றிசெய்யும் புண்ணியரின் வாழ்விற்கு நிகர் பிறிதில்லை என சொல்கின்றதை நாம் உணர்ந்தால் நன்று,

# வாரியரர் மண்வாரிக் கொட்டுகின்றுர்

## எதில்? மேன்மைகொள் சைவநீதியில்

சைவம் என்றுல் யாது? அது சிவத்தொடு சம்பந்தம். சிவம் என்பது கடவுள். சிந்தைக்கு எட்டாதது. அப்பொருளை நாடி உணர அமைந்த சமயமே சைவம் என்பது!

உலகில் சமயங்கள் பல உள. அகச்சமயம் புறச்சமயம்புறப்புறச் சமயமென பலவுண்டு. எல்லாச் சமயத்தின் கொள்கையும் தீமையை விடுத்து நன்மை புரியும் படி நீதிகள் வகுத்துள்ளன.

இவ்வகை பல சமயங்கள் நீதி சொன்னுலும் சைவத்தின் நீதியை மேன்மை கொள் சைவநீதி எனப்பெரியோர் கொள்கின்றனர், ஏன் அப்படியாக சைவநீதி மேன்மை உடையது எனச் சொன்னல்! சைவத்தின் மேன்மையான நீதி ஒன்றில்தான் எவ்புபிநம் திநவருள் கடாட்சம் பெற சில நன்மைகள் சொல்[illegible]. இந்த நீதியில் இறைவன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறி தவறாத நீதி உண்டு.

இதனைத் திருநாவுக்கரசர் தமது ஒரு தேவாரத்தில் "தற்பரமாய் சதாசிவமாய் தானும் நானும் ஆகின்ற தன்மையனை பொற்புடைய பேசக் கடவோம். பேயர் பேசுவன பேசுதுமோ பிழை அற்றோமே'' என்கின்றார்

இவரது வழியை பின்பற்றி இறைவன் அருள் பெற அவன் புகழ் பேசும் ஒருவரையாதல் நாம் இன்று காணமுடியாது இருக்கின்றது. வழி பட்டு உய்யக் கட்டிய கோவிலை பிரசங்கம் செய்து வேடிக்கை பேசி அவை கேட்டுச் சிரித்து பாராட்டிப் பட்டம் கொடுக்கும் இடமாக ஆக்கி விட்டனர். இந்த நிலையை மக்கள் உருவாக்கியவுடன் கோவில் என்றால் திருவிழாச் செய்ய பிரசங்கம் செய்ய மட்டும் தான் வேண்டியது எனக் கருதுகின்றனர்

இந்த நிலையில் சமய வாழ்வு அதற்குரிய உண்மை நிலைகெட்டு பேயர் பேசும் வீண்கதை விழல்கதை கற்பனைக் கதைகளை மக்கள் உண்மை என நம்பி கேட்டு மகிழும்படி வந்திட்டது.

பெருமளவு பொருள் செலவழித்து பிரசங்கம் திருவிழாச் செய்கிறார்! எத்தனையோ பேர் இதனால் திருவருள் நிலை அடைந்தார் யாரேனும் உண்டா என்றால் அதற்கு பதில் சொல்ல மழுப்புகின்றார்!

இறைவன் புகழ் கேட்பது இறைவனைத் தியானம் செய்தற்கு உதவியாகும். ஆனால் வேடிக்கை கதையும் விழல் கற்பனையும் பேசல் தியானத்திற்கு உதவுவதோ?

இன்றைய பிரசாரத்தில் மக்களை இத்தகைய வேடிக்கை கதைமூலம் மகிழப்பண்ணி பொருள் ஈட்டி பெரும்வாய்ப் பொன்னை திருமுருககிருபானந்தவாரியார் பெற்றுக்கொண்டார். இன்று சைவம் செய்த பழியோ நாம் அறியோம் வாரியார் மேன்மை உடைய சைவ நீதியில் மண்வாரிப் போடுகின்றார். பெரிய புராணப் பிரசங்கம் செய்யப் போய் பேய்க் கதையும் பேசுகிறார். பெரியபுராணப் பாடல் பாடி அதன் கருத்தை இனிமை பெறச் சொல்லல் நன்று.

ஆனால் வாரியார் அதோடு தொடர்பிலாத கற்பனைக் கதைகளைப் புகுத்துதலாலே பெரியபுராணத்திற்கே பெரிய இழுக்கை அவர் தேடிக் கொண்டார்.

தான் என் செய்கின்றார் தமது வார்த்தை திருவருளுக்கு ஏற்குமோ? மேன்மக்கள் தம்மைப்பற்றி என் நினைப்பார்? தமது பேச்சால் வருங்கால சந்ததியினர் என்னவாகிவிடுவர் என்ற எதைப் பற்றியும் சிந்தியா வகை வாரியார் பேசுகிறார். நாவுக்கரசர் சொல்லும் வகையாக பொற்புடன் பேசாது பேயர் பேசுவன பேசுகிறார். அவர் பேசுவதை அறிவாளிகள் பலர் உணர்ந்து வேதனைப் படுகின்றார். அதில் ஒருவர் நமக்கு சொன்ன செய்தியைக் கீழே காண்கின்றீர்கள்.

சுவாமி விவேகானந்தர் தன் குருவான இராமகிருஷ்ணர் தன் மனைவி சாரதாதேவியுடன் உடல் உறவு வைத்திருந்தாரா? அல்லது நீங்கி உள்ளாரா? என சந்தேகித்தாராம்! அந்தச் சந்தேகம் தீர இராமகிருஷ்ணரும் சாரதா தேவியும் சயனித்திருக்கும் இரவு நேரத்தில் அவர் அறையின் சுவரில் ஓர் ஓட்டை துளைத்து அதன் மூலம் உற்று நோக்கினாராம் விவேகானந்தர். (இரவு முழுவதும் பார்த்தாரோ அல்லது கொஞ்ச நேரம் பார்த்தாரோ அது சொல்லவில்லை.) அப்படிப் பார்த்த போது அவர்கள் உடல் உறவு இல்லாதிருக்கக் கண்டு கொண்டாராம் விவேகானந்தர். மறுநாள் காலை சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணரிடம் சென்றாராம் குரு சீடரைக் கேட்டாராம்! இராத்திரி ஓட்டைக்குளால் பார்த்து தெளிந்தாயோ என்றாராம். நான் பார்த்தது உமக்கு எப்படித் தெரியும எனக்கேட்டாராம்! சீடன் உடன் இராமகிருஷ்ணர் என் உணர்வில் கண்டேன் என்றாராம் என்று திருமுருககிருபானந்தவாரியார் கொழும்பு ஜிந்துப்பிட்டி சுப்பிரமணியசுவாமி கோவிலில் தாம் யாரிடமோ வாரிக் கொண்ட இரகசியச் செய்தியாக அந்த கோவில் தலத்தில் அதுவும் பெரியபுராணத்து பிரசங்கத்தில் மகிழ்வுடன்சொன்னதாக அங்கு கூடியிருந்த கொழும்பு மாக்கள் அதுகேட்டு உளம் மலர்ந்து வியப்பில் ஆழ்ந்ததாக வீரகேசரிபத்திரிகை மூலம் தான்பார்த்து தெரிந்து கொண்டேன் நீங்கள் காணவில்லையோ! வாரியார் சோக்கான பிரசங்கம் செய்கிறார்; ஐயா இதென்ன கதை வாரியார் கோவில் சந்நிதானத்தில் சொல்லுகிறார் என்றுதம்கவலையை மானிப்பாயச் சேர்ந்த இளைப்பாறிய கணக்காளர் திருஅ.நாகலிங்கம் என்னிடம் தெரிவித்தார்.

சிலவேளைகளில் நான் சந்திரதீபப் பத்திரிகையை சில அன்பரிடம் நேரில் சென்று கொடுப்பேன். அப்படி இம்முறை என் பத்திரிகையைக் கொடுக்கச்சென்ற நேரம் இந்தச் செய்தியைச் சொன்னார். அதிலும் ஓர் அற்புதநிலையை நான் தெளிந்து கொண்டேன். ஏன் என்றால் எனது சந்திரதீபத்தில் திருமுருககிருபானந்தவாரியார் ஓர் சுவாமி அல்ல! அவரிடம் உண்மை இல்லை அவர் பேச்சும் ஓர் வில் இசை நிகழ்ச்சியும் ஒன்றே தான். அவர் முருகனை தான் வழிபடுவதாக வருந்து காட்டிய பிரசங்கம்செய் பேதை மக்களை உண்மை அறியாத பொருளை நிறைந்த உள்ளங்களை மகிழ்விக்க பல பொய்க் கற்பனை சிருஷ்டித்து பலகதை உண்மை போலச் சொல்லி ஏமாற்றுகிறார் இவரும் கடவுள் நெறியணி [illegible] வந்து காசுவேண்டி தாம் அனுபவிக்கும் போலிச் சுவாமிகளும் ஒன்று நான் இவர்கள் யாவரும் சமய வியாபாரிகள் உண்மையானவர் அன்று பொய்யர் என்று முன்பெல்லாம் எழுதிவர நாகலிங்கம் ஐயா அவர்கள் அன்று ஒருநாள் என்னைநோக்கி என்ன உங்கள் பத்திரிகையில் கண்டனம் கூடிப் போச்சு வாரியார் போன்றோரை எல்லாம் கண்ணடிக்கிறீர்கள். எவ்வளவு சனம் அவர் பேச்சைக் கேட்கிறது என்று சொன்னார்; ஆதலால் அவரிடம் நான் கேட்டேன் ஐயா அன்று நான் சொல்வது தவறு என்றீர்கள்! இன்று என்ன ஆயிற்று! என்றேன் அப்போது அவர் நீங்கள் சரியாய்தான் சொல்லி இருக்கிறீர்கள்! இத்தகையோருடைய பேச்சுக்கள் மக்களை இளம் சமுதயத்தை பழுதாக்கும் வகையில் தான் அமைந்ததாய்விட்டு வாரியார் வேறு எந்த விதக்கதையையும் சொல்லலாம் ஆனால் ஆத்மிகத்துறையில் மேற்கு நாடுகளுக்கு உண்மை விளக்கிக்காட்டிய விவேகானந்தர் பற்றிய சின்னத்தனமான கதையைச் சொல்லியிருக்கக்கூடாது நான் விவேகானந்தருடைய புத்தகங்கள் நிறைய வசித்துள்ளேன் எங்காகிலும் இப்படியான ஒரு கதை வாசித்ததில்லை கேட்டதுமில்லை. ஆதலால் இத்தகைய கதைகளை சொல்லும் போது இராமகிருஷ்ணர் விவேகானந்தர் போன்ற பெரியாரின் மரியாதையையும் கவுரவத்தையும் பேணிக்கொண்டு பெண்கள் இருக்கும் சபையில் மிக அவதானமாகப் பேசல் வேண்டும் எனக் கூறிமுடித்தார்: நான் சொன்னேன் உலகமக்களுக்கு உறுதி காட்டக் கூடிய உண்மை நெறிசைவநெறியே அது இன்று பொய்ப்பிரசாரகர்களால் பங்கப் படுகிறது நாம் என் செய்யலாம்.!

# கற்ற அறிவால் கடவுளைக் கண்டவன்போல் கூத்தாடல் பெருங்குற்றமாகும்

எனவே என் நெஞ்சம் குறுகுறுக்கும் என் கின்றார் தாயுமானவர். சென்ற இதழின் தொடர்பாக தாயுமானர் பராபரக்கண்ணியைக் கீழே தருகின்றோம். அவர் வாக்கியம் அனைத்தும் திருவருள் நிலையில் பொற்புடையதாக உள திருநாவுக்கரசர் சொல்கின்ற பொற்புடைய வார்த்தைகள் என்பன இவை போன்றதே யாகும் யோகசுவாமிகளும் இவர் கருத்தை தெளி பத்தி சாமி பண்ணிக்காட்டாதே! மாகிரி ஒன்றும் செய்யாதே என்பார் தாயுமானவ சுவாமிகள் பாடலில் பலமேன்மையான சைவநீதிகள் உங்களைத்தெய்வநிலைக்கு ஆக்குவன இப்பகுதியில் காணலாகும்.

## பராபரக்கண்ணிகள்

உற்றறியும் என்னறிவும் உட்கருவி போற்சவிமாண்
டற்றும்இன்பந் தந்நிலையே ஐயா பராபரமே.

உன்னை அறிந்திட உற்று நோக்கும் எனது அறிவும் அதற்கு அந்த அறிவிக்கு அறிவாகி ஆழ்ந்து இருப்பதை என் செயல் மாண்டு அற்று வரும் அந்த இன்பத்தை தராதிருந்தனையே ஐயா எனவே தனை தெரிவிக்கின்றார். 26

சொல்லால் அடங்காச் சுகக்கடலின் வாய்மடுக்கின்
அல்லால்என் தாகம் அறுமோ பராபரமே.

சொல்லால் சொல்லி முடியாதசுகக்கடலில் நான் வாய்வைத்து உண்டால் அல்லால் என் தாகம் அறுமோ? எனக்கேட்கின்றார். 27

பாராயோ என்னை முகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

ஆசைப்படும் ஏழையை அந்த சுகக் கடலைத் தரவல்லவனை நீ பாராயே; முகம் பார்த்து ஒரு கால் அக்கடலைப் பெறவில்லையே என்ற என் கவலை தீராயோ வாய் திறந்து ஒருக்கால் சொல்வாய் என் கடவுளே! குருமணியே! என்றவாறு. 28

ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயதோ ஐயா பகராய் பராபரமே.

நாள் தோறும் எழும் என் மனக் கவலை ஓயாதோ உள்ளத்திலே ஆனந்த வெள்ளம் பாயாதோ என ஆசைப்பட்டவாறு. 29

ஒகோ உனைப்பிரிந்தார் உள்ளங் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.

உன்னைப் பிரிந்தார் உள்ளம் எவ்வாறு கசிவு பெறும் பெருதே என்றவாறு: 30

கூர்த்தஅறி வத்தனையுங் கொள்ளைகொடுத் துன்னருளைப்
பார்த்தவன் நான் என்னைமுகம் பாராய் பராபரமே.

கூர்த்த அறிவு அத்தனையும்—கூர்மையானதாக நான் பிறவிடங்கள் அத்தனையும் அறிந்து புத்திசாலியாக நடந்த சந்தர்பத்துக் கேற்றவாறு ஒழுகி பொருள் புகழ் ஈட்டி வீடு வாசல் பெருள் இவை பெருக்க உதவும் கூர்மை அறிவு புத்திக்கூர்மை எனவும் சொல்வார்; கொள்ளைகொடுத்து இந்த அறிவினை உனக்காகப் பாவித்து அல்லது உன்னை அறியப் பாவித்து நீ எங்கே என்று பார்த்தவன் நான் என்கின்றார்.

மேலைத்தேசத்து இந்த அறிவின் கூர்மையால் சந்திரனிலும் போய் இறங்கினர் பல கோடி உயிரை ஒரு கணத்தில் வதைக்க அணுகுண்டு முதல் பலவும் கண்டனர். இயந்திர மூலம் தம் வாழ்வைப் பெருக்கினர். இவற்றில் உற்று பிரயோகிக்கும் அறிவு யாவற்றையும் நான் கைவிட்டு அந்த அறிவின் நுணுக்கத்தால் உன்னைப் பார்த்தவன் நான் என்கின்றார் சிவனை அறியும் தந்திரங்கட்கு ஆகமம் எனச் சொல்வார்கள். சிவனை அறிதற்குற்ற ஒழுக்கங்களாக அவை அமைந்தன, இது இன்று யாருக்குவிளங்கப் போகுது?: 31

கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே.

நெடுநாள் தேடிக் காணாது நான் படும் அல்லலாய கவலை சொல்கின்றார். ஆதலினால் கடல் அமுதே என்கின்றார். கடலில் அமுதும் உண்டு. நஞ்சும் உண்டு முதல் வருவது நஞ்சு பின் வருவது அமுதம் ஆதலால் நஞ்சு போலும் கவலை நான் தாங்கேன் என்கின்றார்;

உள்ள மறிவாய் உழப்பறிவாய் நான்ஏழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

என் உள்ளம் நீ அறிவாய் என் பிழை யாவும் நீ அறிவாய் நான் ஓர் ஏழை. இவன் வீணன் விட்டு எறிவு என்னைத் தள்ளி விடாதே! தள்ளிவிட்டால் நான் மெத்தத் தவிப்பேன். என்கின்றார். இப்பாடலில் உலகில் புன்மையான பொருள் யாதும் தான் விரும்பவில்லை; ஆதலின் ஏழை எனச் சொல்கின்றார். 33

கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலஎனக்
கென்றிரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே.

பசுவின் கன்று தன் தாய் பால் முலை மடியில் இடித்தாலும் அது கோவிக்காது அன்பால் பால் இரங்கிக் கொடுக்கின்றது. இதேபோன்று என்று நீ இரங்குவாய் என்கின்றார்: 34

எண்ணுக எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.

இப்படி நடக்குமோ அப்படி நடக்குமோ என எண்ணுத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணி ஏழையேனுடைய நெஞ்சம் புண்ணானது; உன் குழந்தை பரிதவிப்புக் காணாயோ; என் செய்வேன் என்கின்றார். 35

ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்னடிமை
பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.

கடலில் அகப்பட்ட துரும்பு அலைகளால் அலைக்கப்படுவது போல் உனது அடிமையாக உள்ள யான் அங்கும் இங்கும் என்று அலைந்தோட ஏன் வைத்தாய்! 36

கற்றஅறி வால்உனைநான் கண்டவன்போற் கூத்தாடில்
குற்றமென் றென்நெஞ்சே கொதிக்கும் பராபரமே.

உலகில் சமயநூல் கற்று வித்துவத்தன்மை பெற்ற அறிவால் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைக் கண்டவன் போல் சுவாமி பண்ணிக் கூத்தாடல் அது குற்றம் என்று என் நெஞ்சு குறுகுறுக்கும் என்கின்றார்: இதனை இன்று பிராமணரும் பிரசங்கச் சுவாமியும் உணர்வாரோ? இதன் உண்மை உணர்ந்தால் ஒருவர் தன்னை என்னென்று நினைப்பார்! தன்னை எந்த இடத்தில் வைப்பார்! பட்டமும் பெறுவாரோ? கொடுப்பாரோ: வித்துவான்களே! உங்களில் மானம் இருந்தால் கல்வியின் தீரம் இருந்தால் பதில் சொல்லுங்கள்? மடாதிபதிகளே உங்கள் மடங்களை சைவசமய வியாபாரக்கடை என்று பெரிட்டு வையுங்கள். முருகன் ஸ்ரோர்ஸ் சிவன் ஸ்ரோஸ் அம்பாள் ஸ்ரோஸ் போல மடாதிபதிகளின் மடங்களும் வாணிப நிலையமே 37

ஐயோ உனைக்காண்பான் ஆசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாய் புகலாய் பராபரமே.

ஈசா உன்னைக் காண்பதே என் ஆசை வேறு இல்லை என்கின்றார்: 38

துன்பக்கண் ணீரில் துளைந்தேற்குன் ஆனந்த
இன்பக்கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே.

— வாழ்வு துன்பக் கண்ணீரே. இதை உணராத மிலேச்சர் அது இன்பம் போல பெருமைப்படுகிறார்கள். இறைவன் அருளாய ஆனந்தக்கண்ணீர் பெறுவதென் நாள் எனக்கவலை கொள்கின்றார். 39

# கடவுளால் படைக்கப்பட்ட யாவரது இருதயமும் வானொலிப்பெட்டியாகும்.

இவ்வாறு யோகசுவாமிகள் தம்மிடம் தெரிவித்ததாக கட்டுவளைச் சேர்ந்த நில அளவையாளர் சு. சின்னப்பு என்னும் பெரியார் நம்மிடம் தெரிவித்தார். அவர் சொன்னார் தான் முதல் முதல் யோகசுவாமியை காண நேர்ந்தன்று இந்த வாக்கியத்தை தமக்குக் கூறினாராம். அவர் சொன்னது இப்படித்தான். "இங்கிலாந்தில் இருக்கும் வானொலி நிலையத்தில் பேசினால் இங்குள்ள வானொலிப்பெட்டி பழுதாகாமல் இருந்தால் அதில் கேட்கும்' பழுதாய் இருந்தால் கேளாது. அதே போன்று எல்லாருடைய இருதயமும் கடவுள் படைத்த வானொலிப்பெட்டியே. அழுக்கில்லாத வகை ஒன்றில் தட்டினால் மற்றதில் தெரியும்'' என்றனர். அப்படிக் கூறிய சின்னப்பு ஐயாவிடம் நான் ஐயா சுவாமி இந்த அருமருந்தன்ன வாக்கியத்தைச் சொல்ல வேண்டி எழுந்த சந்தர்ப்பத்தை விரிவாகக் கூறுங்கள். கேட்டிடற்கு பெரும் ஆவலுடையேன். என்றேன்

அப்போது சின்னப்பு ஐயா அவர்கள் சிரித்து விட்டு சுவாமியின் வரலாறு சொல்லத் தொடங்கினார்.

1936ம் ஆண்டு என நினைக்கின்றேன். நாம் டியத்தலாவையில் கடமை புரிந்த காலம். அந்தக் காலத்தில் நமது நண்பர் திருவாளர் மார்க்கண்டு அவரும் ஓர் நில அளவையாளர் [தற்போது கைதடியில் தூய சந்நியாசமுடன் ஆச்சிரமத்தில் தங்கி இருக்கிறார். அவரது வீட்டில் நான் சாப்பாட்டு வசதிக்காக இருந்தேன். நாங்கள் தாவர உணவு வசதிக்காக அவ்வீட்டில் டியத்தலாவையில் இருந்தோம், அது ஓர் இரண்டறை உடைய வீடு என நினைக்கின்றேன். அக்காலத்தில் ஒரு நாள் திரு மார்க்கண்டு என்னை நோக்கி இன்று பின்நேரம் யோகசுவாமி இங்கு வருவார் எனச் சொன்னார். ஆனால் சுவாமி அவர் சொன்ன அன்று காலையில் வந்துவிட்டார். அந்நேரம் நாம் காலைச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

சுவாமி வந்ததும் அவர் தங்குவதற்கு வசதிகள் செய்தோம். அப்போது சுவாமி எங்களை நோக்கி நீங்கள் எல்லாரும் நேரத்திற்கு வேலைக்குப் போங்கள் என எங்களை அனுப்பினார். நாம் நமது வேலை அலுவலகங்களுக்குச் சென்று கடமை புரிந்த பின்னர் பின்நேரம் நீராடி அங்கு டியத்தலாவையில் இருந்த தமிழ் மக்களும் நாமும் சுவாமியைத் தரிசிக்குமாறு அவர் அவரால் எடுத்துச் செல்லக் கூடிய கையுறைப் பொருள் மலர் பழம் இவற்றுடன் சுவாமியைக் காணச் சென்றிருந்தோம். எங்களுடன் வேறு சிலரும் வந்திருந்தனர். நாங்கள் யாபேரும் சுவாமி இருந்த அறைக்குச் சென்று இருந்தோம். சுவாமி ஓர் கட்டிலில் எமக்கு பின் புறமாகிய வண்ணம் சயனித்திருந்தார். நித்திரையாய் இருக்கவில்லை. விழிப்புடன் இருந்தார். நாம் போன நேரம் கிட்டத்தட்ட 4.30 மணி இருக்கும். 5 30 மணியாயும் எங்களுக்கு ஒருவார்த்தையும் இல்லை. ஒரு குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கக்கூடிய அமைதி நிலவிக் கொண்டிருந்தது. சாந்தம் குடி கொண்ட அப்பெரு வேளையில் எனது மனதில் ஓர் சஞ்சலம் எழுந்தது. அது தான் இதென்னடா இது இவ்வளவு பேரும் நாம் இங்கு இருக்கின்றோம். எங்கள் ஒருத்தரிடமாகுதல் சுவாமியிடம் ஒருவார்த்தை சொல்லத் தைரியமில்லை. அல்லது சுவாமிதானும் தாமாக ஒரு வார்த்தை சொன்னாரில்லை. எங்களுக்கு பின்புறமாக அங்காலை திரும்பிப்படுத்திருக்கிறார் என நினைததேன். நினைத்தவுடன் சுவாமி திரும்பி நேரே என்னை நோக்கி "சின்னப்பு இங்கிலாந்தில் ஓர் வானொலி நிலையம் இருக்கிறது. அதில் சொல்ல இங்குள்ள வானொலிப் பெட்டியில் கேட்கின்றது. ஆனால் அந்த வானொலிப் பெட்டி பழுதானால் அதில் கேளாது. அதே போன்று எல்லாரிடமும் கடவுளால் படைக்கப்பட்ட இருதயம் இருக்கிறது. அதைத் தூய்மையாக வைத்துக் கொண்டு ஒன்றில் தட்டினால் மற்றதில் தெரியும் இதுதான் விடயம் என்றார். நான் திகைத்துப் போனேன். ஏன் என்றால் எனது நினைப்பிற்கு உற்ற பதிலாகவே அந்த திருவாக்கு இருந்தது இது உண்மை தான். சித்தத்தை தூயமையாக வைத்திருத்தல் தான் முக்கியம். சித்தம் தூய்மைப்பட்டால் எல்லாம் தெரியும். என்று கூற பின்னரும் சொன்னார். இந்த ஒரு விடயம் அல்லாது இன்னமும் ஒன்று இரண்டு அற்புதம் சுவாமிகள் முன் நிகழ நேரில் கண்டேன் என்றதும் ஐயா அதனையும் சொல்லுங்கள் என்றேன். அவர் சொன்னார் நான் டியத்தலாவையில் இருந்து இரத்தினபுரிப்பக்கம் மாற்றலாகிச் சென்ற காலம் சரியாக அக்காலத்தை நிர்ணயித்துச் சொல்ல முடியவில்லை, அங்கு அப்பொழுது சங்கரத்தையைச் சேர்நத திருவாளர் தில்லையம்பலம் ஓவசியராகக் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அவரது இல்லத்திற்கு யோகசுவாமி வந்திருந்தார், அப்பொழுது நானும் அங்கு சென்றிருந்தேன். சென்றிருந்த நேரம் சுவாமி திருமுன்பு பல கையுறைப் பொருள்கள் இருந்தன. அவற்றுள் ஓர் பெரிய தட்டத்தில் தோடப்பழங்கள் சுவாமிக்கு முன்பாக இருந்தன, சுவாமி எங்களுடன் பல கதைகளையும் கதைத்துக் கொண்டு இருந்தார், நயம் அவரது திருமொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்தோம். மிகவும் சாந்தமான நிலை அங்கு நிலவியது, இருந்தாற்போல் சுவாமியின் கோலம் மாறியது. ஐயோ பாவம் எனக் கூறிக்கொண்டு அங்கு திருமுன்பு இருந்த தோடம்பழம் ஒன்றை எடுத்து தமது அருகில் வைத்தார் சற்று பொறுத்து சுவாமி பழைய நிலையில் எம்முடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

இப்படி சில நேரமான பின் வாயில் பக்கம் சுவாமி போனா கினர், அங்கு ஓர் கார் வந்து நின்றது. சுவாமி எழுந்து போக வாயில் பக்கம் சென்றார். காரில் இருந்தவர்கள் இறங்கி சுவாமியைக் கும்பிட்ட வண்ணமாக வந்தனர். அவரை நோக்கி உங்களுக்கும் காருக்கும் ஒரு பழுதும் இல்லையே எனக் கேட்டார். அவர்கள் ஓர் சிங்களக்குடும்பம். அவர்கள் சுவாமி எங்களுக்கும் காருக்கும் ஒரு பழுதுமில்லை பள்ளத்தில் கீழாகப் புரண்டு வீழ்ந்தும் கார் வேலை செய்து கொண்டு இருந்தபடியால் நாம் தப்பினோம் எல்லாரும் காப்பாற்றப் பட்டோம் எனக் கூறினர் பின்னர் சுவாமி தனது ஆசனத்து வந்து அமர்ந்தனர்.

இருந்த பின்னர் அவர்களும் அங்கு வந்து அமர்ந்தனர். அவர்களிடம் சுவாமி தமது முன் பிருந்த தோடம்பழம் சில வற்றைக் கொடுத்து அதன் பின்னராக நாம் முன்ஆச்சரியபட அருகில்வைத்த அதனைஎடுத்து இந்தாருங்கள், உங்களை காரில் நேர்ந்த விபத்தில் நின்று உங்களைப் பாதுகாத்த கடவுளாய தோடம்பழம் என அதனைக் கொடுத்தார் அச் சிங்கள மக்கள் சுவாமி கொடுத்த பிரசாதப் பொருளை பணிவுடன் வேண்டிச் சென்றனர். இந்த அற்புத காட்சியை நேரில் காணும் பாக்கியம் பெற்றவன் நான் எனக் கூறி தன் கதையை முடித்தார் சின்னப்பு ஐயா. இப்படியாக தன்னை அண்டி வரும் யாவருக்கு பெற்ற தாயினும் சாலை உடையதாய் அருள் புரியும் யோககவாமி நம்பிரான் இவன் நம்மை நோக்கி வருவானோவென்று சிறுபல்லியை கேட்டு பாடியருளும் பதிகம் ஒன்று கீழே தருகின்றோம்.

## நாதன் வருகைக்கு சிறுபல்லி நல்வரவு சொல்

எல்லாஞ்செய வல்லபிரான் இங்குவரு மாகில்
ஏத்துவார் மனம்வாழும் ஈசன்வரு மாகில்
கல்லார்க்கும் அருள்புரியுங் கடவுள்வரு மாகில்
களிப்புடனே நல்வரவு சொல்லுசிறு பல்லி.

காமாதி குணமெல்லாங் கட்டவிழு மாகில்
சருணையே வடிவான கடவுள்வரு மாகில்
தானாக எழுந்தருளும் தாணுவரு மாகில்
சடுதியாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

தத்துவம் ஆறாறும் வெந்துவிடு மாகில்
தானான தன்மைவந்து தலையெடுக்கு மாகில்
பத்தர்களை நீங்காத பரமன்வரு மாகில்
பக்குவமாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற ஒருவன்வரு மாகில்
உண்மைநிலை என்மனதில் மெல்லவரு மாகில்
வழியடிமை கொள்கின்ற வள்ளல்வரு மாகில்
வருத்தமின்றி நல்வரவு சொல்லுசிறு பல்லி.

சொல்லமுடி யாதபொருள் சொல்லவரு மாகில்
சும்மா இருக்கின்ற சுகங்கிடைக்கு மாகில்
எல்லாருங் காணவெனைப் பித்தேற்று மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி.

தேனுந்து கொன்றையணி செல்வன்வரு மாகில்
சிவகாமி பங்கிலுறை தெய்வம்வரு மாகில்
நானும்நீயும் ஒன்றாகி நிற்கவரு மாகில்
நல்லகுரல் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

வேதமறி யாதபொருள் விரைந்துவரு மாகில்
மேவுமிட மெங்குமறி வாகிவரு மாகில்
நாதமுடி மேல்நடனம் நாங்காணு மாகில்
நல்லகுரல் நல்லதசை சொல்லுசிறு பல்லி.

தொந்தோமென் றாடுந்திருப் பாதம்வரு மாகில்
சுரிகுழலாள் பாகனார் இங்குவரு மாகில்
வந்தோம்வந் தோமென்னும் அடிகள்வரு மாகில்
வளப்பமுடன் நல்லகுரல் சொல்லுசிறு பல்லி-

வெள்விடைமேல் உவந்தேறும் விமலன்வரு மாகில்
வேதத்தி னுட்பொருள் விளங்கவரு மாகில்
எல்லவர்க்கும் பொதுவில்நடம் நாங்காணு மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி.

பூதங்கள் ஐந்தான புனிதன்வரு மாகில்
புன்னெறியிற் செல்லாத சிந்தைவரு மாகில்.
தாதவிழும் சடையப்பன் இங்குவரு மாகில்
தண்மையுடன் நல்வரவு சொல்லுசிறு பல்லி.

பாடல்பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் எல்லாம்
பங்கமின்றி வாழ்ந்துபின் பரமனரு ளாலே
[illegible] புகுந்திடுவர் மெய்மையிது வாகும்
விட்டுவிட்டு நல்லாரல் சொல்லுசிறு பல்லி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது சொல்லை ஏற்காத மனைவியுடன் வாழ்தலிலும் நரகம் இனிது.

இப்படியாக கந்தபுரணத்து கச்சியப்பர் இல்லறதருமத்தின் உயர்ந்த சைவ சீலம் பற்றிய ஓர் நற்கருத்து காட்டுகின்றுர். இந்த ஒரு வாக்கியம் உண்மையில் இவ்வுலக வாழ்வில் நாம்இருக்கும் துணையும் இன்றும் இனிமேலும் என்றும் சிந்தித்திட வேண்டியதாகும். இந்த வாக்கியமானது தனது தந்தை குச்சக முனிவரிடம் மகன் கவுசிகர் கேட்டதாக உள்ளது. அதன் வரலாறுவது குச்சக முனிவர் தன் மகன் கவுச்சிக முனிவர் தனது பிரமசாரிய வாழ்வு நீங்கி திருமணம் புரியுமாறு வேண்டுகின்றுர். மகனே பெண்கள் உறவு தெய்வ அருள் நிலையில் சேர்வதற்கு இடைஞ்சலாக உள்ளது. அவர்களிடம் வாழ்க்கையில் சிக்குப்பட்டுக்கொண்டால் பின்னர் தனது தெய்வ அருள் நாட்டங்களை நீக்கிக் கொள்ளல் வேண்டும் என்று பெண் உறவால் விளையும் தீங்குகள் நன்மை தரும் அருள் நெறிக்கு பங்கம் விளைவிக்கும் காரணம் எடுத்துக் கூறி திருமணம் செய்ய மறுத்திடலும் அப்போது குச்சகர் இல்லறத்தின் உயர்வு பற்றி விளக்கி தந்தை சொற்படி மைந்தர் நடத்தல் மேலான வழிபாடு என்றலும் அதுகேட்டு கவுச்சிகர் திருமணம் புரிய இசைந்து தந்தையை நோக்கி தனது சொற்படி நடக்கும் ஓர உத்தமி வாழ்க்கைத்துணைவியாக அமைந்தால் அது சொர்க்க வாழ்வு. வேத வழி ஒழுகும் எமக்கு இது அவசியம். அருள் வழி திற்பார்க்கு தன் சொல்லை மதித்திடாத மனைவியுடன் வாழ்க்கை நரகவேதனையாக இருக்கும.

ஆதலினுல் எமக்கு ஓர் பெண் உத்தமியாக இருக்க வேண்டின் அவளிடம் இன்ன இன்ன குணங்கள் உண்டாயிருக்கும். என்று தாம் திருமணம் செய்யும் பெண்ணின் குண இயல்பு கூறி; கோத்திர மரபு கூறி அக்கோத்திரத்தில் காணப்படும் புண்ணிய விருத்தி கூறி அப்படியான பெண்ணையே தாம் விரும்புவதாக தெரிவிக்கின்றுர்.

இதன் தாற்பரியம் யாதெனில் ஒருவன் இல்லறத்தில் பிரவேசிக்கின்றுன். பிரவேசிக்கும் அவனுக்கு வாழ்கை துணைவியாக ஒரு பெண் வாய்க்கிருள், இந்தபெண் எப்படியாக இருக்கவேண்டும்? தனது கணவன் பிரமச்சாரிய வாழ்வை நீங்கி தன் இல்லறத்தில் புகுந்து இல்லறத்துக்குரிய வாழ்வை மேற் கொள்ள துணைவியாகின்றவளாக அமைய வேண்டும். ஆதாவது ஓர் மரம் தன்நிழலில் அடைவார்க்கு இனிய நிழலைச் செய்து குளிர்வித்தல் போன்று தூய கருணையின் பணிபுரிவவளாக அமையவேண்டும். இதுதான் சைவர்களுடைய நீண்டகால நாகரீகம்.தெய்வத்தன்மை உடையதாய் தருமத்திற்கு வித்தாய் தவத்திற்கு ஊன்று கோலாய் அமைவது இதுவே. இத்தகைய முறையாக சணவன் மனைவி என்ற நிலையில் இருவரும் .இல்லறத்தில் பிரவேசித்தல் அறத்திற்குரிய வழியே! இதை என்று யாழ்பாண நாட்டில் உண்மையாம் படிஉணர்ந்து கொள்வாரோ? இதைத்தான் பதிவிரத தர்மம் எனச் சொல்வார்கள். பதி என்பது கணவன். கணவனுயவன் ஓர் பெண்ணை சிவாக்கினி சாட்சியாக ஏற்றுக்கொண்டவன். அவனைத் தெய்வமாகக் கருதி பணிபுரிதல் பெண்களுக்கு ஓர் விரதமாதலின் பதிவிரதம் பதிவிரதை என முன்னேர் சொல்லி வைத்தனர், தன் கணவனை வேருகக் கருதி தனக்கு கடவுள் அருள் வேறுவழியால் கிடைக்கும் என விரதம் இருக்கும் பெண்கள் தம்மை ஏமாற்றுகின்றுரே அன்றி அவர் சைவப் பெண்மைக்குரியவள் அன்று. வேற்று நாடுகளில் ஓர் பெண் எத்தனை கணவனுடனும் வாழ்க்கை கொள்ளலாம் என அவர் கொள்கின்றனர். உண்மையில் அது மிருக வாழ்வு. ஓர் பெண்மிருகம் தனக்கென ஓர் ஆண் மிருகத்தை காணுது. எத்தனை ஆணமிருகத்துடன் அது இசைய முடியுமோ அது பொருந்துகிறது. அது போலவே மேற்கு நாட்டு நாகரீகம் அது அருட்தன்மை உடையதன்று.

ஆனல் தமிழன் தம் வாழ்வில் மிருகத்திலும் உயர்ந்த ஓர் நாகரீகத்தைக் கண்டான். அந்த உயர்வில் தமிழன் தலை நின்றுன். ஈடு இணையின்றி நின்றுன். தன்னைப் பிற ஆடவர் தீண்டாது பாதுகாத்து தன்னை ஏற்றுக் கொண்டானை பேணி பணி புரிந்து அவன் சொல்லைக் காத்து சோம்பலின்று சுறு சுறுப்பாய் இருப்பவளே பெண் என்றுர் தமிழனது நாசரீகம் உரைத்த வள்ளுவர் அவர்கூற்றிற்கு அமைந்த வழிஓர் பெண்ணை ஒரு மணிதன் பெறுவானேயாகில் அவன் வாழ்வு சொர்க்க வாழ்வு! உண்ண உணவில்லையாயினும் உடுக்க துணி இல்லையாயினும் மரத்தின் தோலும் இலையும் அணியவரினும் மேற்கூறிய நிலையில் இல்லறம் பேணுல் அது தான் தெய்வ நிலை. அத்தகைய பெண்களைத்தான் அணங்கனையார் ,திருவினும் பெரியார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

ஆனல் மேற்கு நாட்டின் நாகரீகமான பெண்களின் மிருக வாழ்வின் அடிப்படையில் உற்பவித்த பல தீயநெறிகள் இங்கு தேவையாகக் கருதப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட ஒலிபெருக்கி வானெலி முதலியவற்றுடன் இங்கு சேர்ந்தனும் தமது பெண்களின் காலாசாரம் அதுவும் கீழ் ந்தங்கி அந்த மிருகவாழ்வே தலையான கலாச்சாரமாக தமிழ் இனத்தும் பரவிக் கொண்டது. இதனுலே பெண்கள் மேடை ஏறினர் தேர் இழுத்தனர் அரசஊழியராயினர் வேறு ஊழியராகி தம் கற்பு நெறியும் பங்கமாகும் விதத்தில் தம் கட்டுப்பாட்டைகாவலை தாமாகஅழித்தனர்.

பெண்கள் மேடை ஏறிய உடன் அவரிடத்து இருக்கபட வேண்டிய நாற் குணமும் நாலு திக்கிலும் பறந்தோடி விடும். மேடையில் ஏறி பிரசங்கம் செய்யும் எந்த ஒரு பெண்ணையும் நான் ஓர் சைவமரபிற்குரிய பெண் என்று சொல்லேன். அவர்கள் மிலேச்ச நெறிக் குரியவரே! அவர்கள் மெல்லியலார் என்னும் பெருந் திருவுடைய வாக்கிற்கு புற நடையானவரே. பெண்கள் மேடை ஏறினுல் அவர் நாற்குண வேலியின் காவலில் வளரும் வானம் சிறக்க வழிவகுக்கும் கற்பும் தவறிடும். வேலி அழிந்தால் விளையும் பயிரை விடுகாலி மாடு தின்னவே செய்யும் அதை தடுக்க முடியுமோ?

இந்த ஒரு நிலையில் எம் சைவமக்கள் பெண்களின் தூய நிலை பற்றி தெரியவேண்டு மாயின் அவர்கள் பெரியபுராணத்து நம்பிக்கை உடையோராக இருந்தால் அதனை வாசித்து அங்கு சைவப் பெண்கள் எவ்வாறு நடந்து கொண்டனர்? அவர்எவ்வாறு இல்லறத்து கடமை யாற்றினர் எப்படி தம் உயர்வு பேணினர்? என்றதெல்லாவற்றையும் நன்கு தெளியுங்கள். இன்று சைவப் பெண்களது தெய்வத் தன்மை உடைய நாகரீகத்தில் மிலேச்ச நாகரீகத்தில்இடைபுகுந்து நமது சைவப்பெண் குலத்தினைநாசமாக்கிவிட்டது.

இன்று மேடையேறும் பெண்கள் சிலர் பெரியபுராணம்இற்றை வடிவாக பேசுகின்றேம்? அதனல் மக்கள் நம்மை விரும்புகின்றுர். அப்படி இருப்ப சந்திரதீப ஆசிரிர் நம்மீது கொண்ட பொறுமையால் இப்படி மேடையில் நாம் நிற்பதுசைவ மரபில்ல என்று சொல்லுகிறர் எனக்கருதலாம். தமது பேச்சு டபேச்சாக இப்படிப் பேசலாம்? அதற்கு நான் ஒன்றும் சொல்ல முடியாது? ஏன் எனில் நமது பணி சைவ மக்களின் மேன்மையான சைவ நீதியை உலகறிய எடுத்துக் காட்டல். மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என தினம்தோறும்ஓதப்படவேண்டியவாழ்துப்பாடலாககந்தபுராணம் சொல்கின்றதுமிலேச்சரது நாகரீகத்து பெண்களது நிலையை எண்ணினுல் நாம் அதுஉணர்ந்து வெட்கப்படவேண்டியதே! ஏன் எனில், இன்று பெண்கள் நிர்வாண நிலையில் வெயிலில் குளிக்க(பேடைக்கோழி சாம்பல் குளிப்பது போல்) கடற்கரை ஓரங்களில்தனியான ஓர் இடம் அமைத்து கொடுத்து தம் வெளிநாட்டுசெலவாணியை மிகைப் படுத்தி நாட்டின் பொருளாதாரம் விருத்தி செய்வாம் என கீழைத்தேச அரசாங்கங்கள் நீர்மானம் செய்திருக்கின்றபோது நாம் எமது மேன்மையான சைவநீதியில் விளங்கி வரும் நற்பண்புகளை பெண்கள் ஒழுகவேண்டிய உபந்த சீலங்களைப்பற்றி இனி எடுத்து விளங்க வைத்தல் கல்லில் நார் உரித்தலாகும்.

சினிமா நடிகரான திருமுருககிருபானந்தவாரியார் பெண்கள் ஆண்களிலும் புத்திக் கூர்மை உடையவர். அவர்கள் புத்திக்கூர்மையைப் பயன் படுத்தியாக வேண்டும் என ஜிந்துபபிட்டிக்கோவிலில் பேசியதாக ஒரு இளைஞர் தெரிவித்தார். அதுகேட்டவுடன் எனக்கு வேறு அவர்க்கு மூன்று மனைவிகள் உண்டு என ஓர் பெரியவர் சொல்லிய போது அது உண்மையோ என்ற சந்தேகம் இருந்தது? உடன் அது தீர்ந்தது? ஏன் என்றுல் புத்திக்கூர்மை உடைய பல பெண்கள் ஒரு சில நாளாகிலும் வாரியாரைமுருகன் என நினைந்து தழுவி இருக்கலாம். தம் செயல் தம் கணவன் மார்க்கு தெரியாதவகையில் தம் புத்திக்கூர்மையைப் பாவித்து நான் வாரியார் சுவாமியை கும்பிட்டு வருவேன். நீங்கள் அப்புறம் எங்காலும் சினிமாப் பக்கம் போயிட்டு வர்றீங்களா என ஒரு கண்சாடை வெட்டுடன் தன் கணவன்மாரை அனுப்பிவைத்து. தம் சுவாமி கும்பிடும் வேலையில் தீவிரபங்கு கொள்ளலாம். முருகன் கிருபையை வாரிக் கொண்டாரத்தீண்டுதலில் தவறுண்டா?

பேதமை என்பது மாதர்க்கு அணிகலம் எனஒளவைப்பிராட்டி மொழிந்தாள்! ஏன் சொன்னுள்? பெண்கள் இயல்பில் குழந்தை போல் தீங்கறியா கபடமற்ற நிலையில் சிறந்த மனமுடைராய் இருத்தல் விபரீத போக்கு அறியா திருத்தல் குழந்தை போல் நாணமுடைாராய் இருத்தல் அதுதான் பேதமை. அத்தகைய பரிசுத்தமான உள்ளப் பாங்குடன் விளங்கும் பேதமையின் நிலையே அப் பெண்ணிற்கு ஓர் ஆபரணம், தனித்தஓர் நகை. காப்போசங்கிலியோ பதக்கமோ ஒட்டியானமோ ஆகிய ஒருவருக்கநகை அன்றி பல ஆபரணமும் பூணடபெண் ஆகின்றுள் என்கின்றன்ஔவை. அவள்சொல்லையார்கேட்பார். அதுதான் மேலான சைவநீதி எதிலும் பொய்மையிலாத கபடமற்ற கொள்கை அதுதான் பேதமைக்கு இலக்கணம். அதுவன்றி ஆடவருடன் ஒருங்குடன் இருந்து தனது கடமைகளை செய்யச் அல்லது அவர் நடுவில் சிங்கம் போல் துள்ளிக்குதிக்க வீராங்கனை எனப்பட்ட பேதமையில் இடமில்லை. ஒருநாள் யோககசுவாமி என்னைநோக்கி பெண்கள் ஆண்களுடன் இணைந்திருந்து கடமை புரிவது நீதியில்லை என்றுர் அதற்காகத்தான் பெண்களை நம்முன்னேர் ஒரு புறமாகத் தனித்திருந்து விளங் கதம் கடமைகளைச் செய்ய தனியான இடம் அந்தப்புரம் எனவிளங்கிட வைத்தனர் அரச்சபைகளிலும் பெண்கள் தனித்தே பிற ஓர் இடத்தில் இருந்தனர் கன்னிமாடம் என கன்னிகட்கு தனித்த இடங்கள் இருந்தன இவையாவையையும் நன்கு நலமுடன்பாதுகாத்துக் கொண்ட தமிழ்அரசர்பலவுண்டு' இத்தகைநிலையில்தான் சைவநெறி ஊற்றெடுத்து வளர்ந்தது பேதமை எதிலும்நாணம் மிகுத்திருத்தல் காணலாகும் தமிழ் மண்ணில் பிறந்த குழந்தைகளை நோக்குங்கள் அவை பிறரை காண வெக்கப்பட்டு ஓடும் ஏதும்கேட்டால் பதில் சொல்லாது நாணும்' தாய் தந்தை உடன் பிறந்தார் உற்றுர் உறவினருடன் கபடமின்றிபழகும். சொன்னதை கபடமின்றிச் செய்யும் கடிந்து சொன்னுல் அழுகைவரும் இவை இப்படியாயின் தெய்வ நிலையில் உயர்ந்த அப்பிள்ளையும் பெண்களும் ஒரு தன்மையாக இருப்பார். இதுதான் பேதமை! இதுவே நற்குணமும் ஒன்றிய நிலை இதை விடுத்து புத்திக் கூர்மை என வாரியார் சொல்வது பேதமை எனும் பொற்புடைய பெண்கள் நிலையில் ஏற்காது. முன் இங்கு வரும்போது வெளியில் சாமிக் கோலம் காட்டிபினைந்த புளிஉருண்டை போல் பொருள்பக்குமாய் ஒருதருக்கும்தெரியாது கொண்டு வந்தவர் போகும் போது பொன் உருண்டையக் குவமாய் கொண்டு போனவர். இந்நிலையில் அவரது புத்திக் கூர்மையிலும் பெண்கள் உயர்ந்தார் என்றுல் அது பேதமை என்ற இலக்கணவிதிக்கு அப்பாற்பட்டது, வாரியார் நிலையில் அது பொருந்தும் சைவநீதியில் அது பொருந்தாது,

ஆகவே பேதமை என்பது அறிவில் குறைந்து தென்இந்தியர் சொல்வது போல் மாட்டுப் பெண் அல்ல. அந்த வழிபேதமை அது வேறு. அறிவில் குறைவு என்பது பேதமை அன்று! பேதை என்பது அறிவால் நிறைந்தது தன் தகவு உண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர்ந்த ஓர் பெண்ணின் தூயஒழுக்கச் சிறப்பு. இத்தகைய பெண்கள் எப்பொழுதும் தெய்வத் தன்மை பொருந்திய வர்ாக இருப்பார். இவர்களை பெரியபுராணத்து சேக்கிழார் திருவினும் பெரியார் எனப்போற்றுகின்றார்.

திரு என்பது இலக்குமியாகும். அந்த அம்மை எப்படி இருப்பார்? அவள் உறையும் இல்லம் எப்படி இருக்கும்? அவளினும் பெரியவர்இத்தகைய நாற்குணமும் நிறைந்த உத்தமிகள் என்றபோது இதை விளங்குவார். யாருமில்லை பெரியபுராணத்திற்கு விழா எடுக்கிறார்கள். பெரியபுராணம் பிரசங்கம் செய்விக்கிறார்கள் ஆனல் பெரியபுராணத்து சீலங்களை விளங்கிக் கொண்டோர் யாரேனும் உண்டா என்றால் அதுதான் சந்தேகமாகின்றது. பெரியபுராணம் பேசுவித்தார்! சரி! பெரியபுராணத்து சொல்லப்பட்ட நாயன்மாரது ஒழுக்கநலன்களில் அணுவளவு அவரைப் பற்றி பேசும் எந்த ஒரு பிரசாரகரிடத்து இருக்கின்றது. ஆண் பெண் என்ற இருசாராரிடத்து யாரிடத்து உண்டு? காட்ட முடியுமா?

நமது நண்பர் ஒருவர் தெல்லிப்பழையில் நமக்கு இழைக்கப்பட்ட தவறுகள் பற்றி தமது வேதனை தெரிவிக்கும் ஓர் கடிதத்தில் சில குறிப்புகள் தெரிவிக்கின்றார். சைவசித்தாந்திகளாகும் எம் பிரசாரகரினதும் அவர் ஆதரவாளர் போக்கு எப்படி இருக்கிறது என அதைக் கொண்டு அறியலாம். அறிவால் உண்மை விளங்கிக் கொண்ட பெரியோர் அனைவரும் இன்றைய சைவப் பெண்களது போக்கையும் அவர் ஆதரவாளரது செயலையும் கண்டு அருவருக்கின்றனர். இதோ அவர் கடிதத்தின் ஓர் பகுதியை கீழே காணுகின்றீர்கள்.

"தற்கால நவ நாயகியர் தூர்க்கதுரந்தர தாச மிண்டர்கள் பழமிருக்க வெம்பல் பிஞ்சை விருப்புற்றவர்கள் இவர்கள் தம் கொடிய செய்கைகள் ஆச்சரியப் படக் கூடியவையல்ல. புராண இலக்கியத்தில் ஊறிப்போய் இருக்கும் தங்களுக்கு நான் சமணகுண்டர்கள் அப்பர் சுவாமிகளுக்கும் புத்த குண்டர்கள் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் செய்த கொடுவினைகளை ஞாபகப்படுத்த தேவையில்லை. ஏன் அனல்வாதம் புனல்வாதம் நடக்கவில்லையா? ஆனல் ஒரு உண்மையை மறவாதிருக்க வேண்டும் அந்த புத்தர் சமணர் தாமும் தங்கள் சமயம் என்று ஒன்று உண்டு என உணர்ந்து அச்சமய நெறிப்பட நின்றனர் அவர் நின்ற சமயங்கள் சைவசித்தாந்த சோபான முறைப்படி புறபுற சமயங்களாக கணித்த போதிலும் அவை சமயங்கள் தாமே. இதற்கு நேர்மாறாக, ஏன் நேர் விரோதமாக இந்த தற்கால நவநாயக்கிய துர்க துரந்தர தாச மிண்டர்களுக்கு யாது ஒரு சமயமும் கிடையாது அவர்கள் போற்றும் சமயம் வாய் வல்லமை வாக்கிய அமுதம் எதுகை மோனகை அடுக்குச் சொற்சித்திரம் அவர்களின் பிரதிஸ்ட மூர்த்தி ஒலிபெருக்கி குளாய் பரிவார தேவதைகள் மின்னொளி லைட்மிசின் என்பன அவர்களின் பொன்னம்பலம் பேச்சுமேடை. அவர்களின் சிதம்பர ரகசியம் பணமுடிச்சு சைவசாதனை சைவஒழுக்கம் சைவநெறி என்பவை அவர்களுக்கு புரியாத புதிர் இவர்களைப் பற்றி குருஞானசம்பந்த முனிவர் நாவலர் பெருமான் பதிப்பித்த சைவசமய நெறி நூல் ஆசிரியர்தமது கமலாளய சிறப்பு என்னும் புராணத்தில் 24ம்சருக்கத்தில் மிகநுணுக்கமாக வர்ணித்திருக்கிறார்கள் அப்பகுதியை ஓர் விரிவுரையுடன் தங்கள் சந்திரதீபத்தில் வெளியிட்டால் மிகவும் உபகாரமாக அமையும்.

மேலே தந்த அன்பரின் கருத்து இன்றைய பிரசாரகரிடத்து உண்மையில் காணப்படுகின்றது: உண்மை அறிவாளிகள் அவர் கூற்றை ஏற்றுக்கொள்வர். பிரசாரப்பிரியரும் மேடைப் பிரியரும் தம் பண மிடுக்கை பிரசார மூலம் புகழ் பெருக்கி அறவழியை அழித்தொழிக்கும் வீணரும் இதை ஏற்கார். இந்து சாதனம போன்ற பத்திரிகைகளும் பிரசாரகரின் புரளிகளை மறைத்து இப் பிரசார பாதகர்களின் மெய் போலும் பொய்யை விளம்பரப் படுத்தி மேன்மையென காட்டுவன ஆதலின் அவையும் நம் கருத்தை ஏற்கா. இப் பேதையர் கூட்டத்தின் பாசாங்குகளை அறிஞர் உணர்வராதலின் நாம் இதனை குறிக்கொள்ளோம். பேயர் பேசுவன நாம் பேசோம். பிழையற்ற நன்நெறியே நாம் சொல்வோம். பெண்களது நாற்குணத்தின் உயர்ந்த கொள்கை கற்பெனும் தெய்வத்தன்மை இன்றைய பிரசாரப் போக்கில் மாசுபடுவன என்பது இனியும் மறைக்க முடியாத உண்மை.

எமது பெண்களின் உயர்ந்த சீலங்களாக கருதப்பட்ட நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணத்தினுல்வளரப்படும்கற்புஅக்குணங்கள் குறைவினல் தவறிடும் அது தவருகாது எனயாம் சொலலமுடியாது.ஒரு நாளாகுதல் கற்புதவறிய பின்மீண்டும் அப்பெணகள் உயர்வாகக் கருதப்படால். அவள் அழகில் இரதிபோல் இருக்கலாம். பாட்டில் குயில் போல் இருக்கலாம் பேச்சில்வீராங்கனையாகஇருக்கலாம் மேடையில் வடிவாக வசீகரமாக பேசுபவளாக இருக்கலாம் திருநீற்றுக்குறி வடிவாகஎழுதி இருக்கலாம் கற்புதவறின் பிறகு அப்பெண்ணின் குணகுணதிசயம் பற்றி நாம் பெருமையாகக் கொள்ள முடியாது.

இதற்காகவே நமது முன்னைப் பெரியோர் பெண்களின் உயர்வை பேணிக்காக்க சில கட்டுப்பாடு விதித்தனர். அந்தக் கட்டுப்பாட்டை உண்மை உணராத சிலர் உடைத்தெறிந்தனர். அவர்களில் பெரும்பலோர் அரசியல் வாதிகள் மேடை பேச்சாளர்; இவர்யாவரும் தமிழ் கலாச்சாரம் உணராத பாவிகளே!

ஆதலினல் கற்புடைய பெண் ஒருத்திதான் கணவன் சொல் கேட்டு நடப்பாள். கணவனை கண்கண்ட தெய்வம் எனக் கொள்வாள். இதனையே ஒளவையும் கற்பெனப்படுவது சொல் திறம்பாமை எனக் கூறி கணவன் சொற்படி ஒழுகள் அது தான் கற்பு என்றார் இவையன்றி எடுத்ததற்கும் வாதிடும் பெண் மூர்க்கம் பிடித்த பெண் கணவனிலும் தான் புத்திக் கூர்மை உடையவள் எனச் சாதிக்கும் பெண். குடும்ப வாழ்க்கையில் தன் கணவனை பின் வைத்து தான் முன்னடத்தும் பெண் வாதாடி வைதிடும் பெண் இவர்கள் யாரும் குடும்ப வாழ்வில் மனைவியாக சந்தித்தால் அவனது வாழ்வு நரகமே. சைவநீதி உயரவேண்டுமேல் சைவப் பெண்கள் நாணம் மடம் பயிர்ப்பு அச்சம் எனும் நான்கு குண நீதியில் வளரவேண்டும்.

தம் சொற்படி ஒழுகிய மனைவி இறந்த பின்பு வள்ளுவர் தன் மனைவியின் பிரிவால் எழுந்த கவலையை ஓர் வெண்பா மூலம் தெரிவிக்கின்றார். அதில் கணவன் சொற்படி நடந்த சிறப்பும் பணி செய்த பண்பும் பேதமையின் பொற்பும் காணப்பெறுகிறது. அப்பாடல் இது வாகும்.

அடிசிற்கு இனியாளே அன்புடையாளே
படிசொல் தவருத பாவாய்-அடி வருடி
பின்தூங்கிமுன்எழும் பேதையே போதியோ
என் தூங்கும் என் கண் இரா,

# பெண்கள்தேர்இழுத்தல்பெண்கட்கே அவமானம் என்கின்றர் ஓர் அம்மை

ஆசிரியர் சந்திரதீபம்
அன்பு மிக்க ஐயா,

தங்கள் பத்திரிகையை தவறமல் படித்து ஆனந்திக்கும் அன்பர்களுள் யானும் ஒருத்தி கோவிலில் பெண்கள் தேர் வடம் இழுத்தது அறிந்து மிகவும் வருத்தமுற்றேன். நம் பெண் குலத்திற்கே இழுக்காக நடந்து வருகின்ற இச்செயல்கள் மீண்டும் தலைதூக்காமல் இருக்கும் அவற்றைக் கண்டித்துத் தாங்கள் பத்திரிகையில் எழுதுவதைப் படித்து மகிழ்ச்சியடைவேன்.

இது விஷயம் குறித்து சில காடையர்கள் தங்களைத் துன்புறுத்தியதாகச் சென்ற இதழில் எழுதியிருந்தீர்கள். வாசிக்கும் போது மிகுந்த மனத்துயரமுண்டாயிற்று. ஆயினும் கடைசியில் திருவருள் துணையால் தங்களுக்கு ஒரு தீங்கும் நேராதமையை படிக்கும் போது 'கற்றுணைப் பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே' என்ற நாவுக்கரசர் வாய்மொழியை நினைவு கூர்ந்து அது இங்கேயும் பலித்தமை அறிந்து மிகுந்த பூரிப்புண்டாயிற்று.

நல்ல காரியத்திற்கு இடையூறுகள் பலவுண்டு. ஆனல் திருவருள் துணை தங்களுக்கு எப்போதும் உண்டு. அத்துடன் எம்போன்ற ஆதரவாளர்களில் வரவேற்பும் நிச்சயம் உண்டு.

(மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்)

பணிவன்புடன்
மெய் அடியாள்

அத்தியடி யாழ்ப்பாணம் 28 2 79

# சந்திரதீபம் சைவநெறியில் உய்தி காட்டும் என அடியார் நம்பிக்கை

அன்புமிக்க
சந்திர தீப ஆசிரியர் அவர்கட்கு எனது அன்பான வணக்கம் ஐயா!

தங்களின் சந்திர தீபம் எனக்கும் பல மடாதிபதிகளுக்கும் சில பிராமண குருமாருக்கும் எதிர்பாராத அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. காரணம் இந்த கலியுககாலத்தில் இப்படி ஒரு பெரியார் சந்திரதீபம் என்ற சமய பத்திரிகை நடாத்தி சைவ சமயத்தை முன்னேற்றுகிறிர்கள். இந்த பெருமை இலங்கையில் வசிக்கும் இந்து மக்களுக்கு ஒரு திருப்பமாகும். உங்களுடைய சந்திரதீபம் எனக்கு வாசிப்பற்கு எனது வீட்டுக்கு அருகில் குருக்கள் ஐயா அவர்கள் தருவார்கள் நான் வாசித்து குருக்களிடம் சரி பிழை கேட்பேன். அதற்கு அவர் சொன்னர் இப்போது பிராமண மார் சினிமாப் பாணியில் நடக்கமுற்படுகிறார்கள் இது [illegible] பிழையான ஒரு விஷயமாகும். நான் சில இடங்களில் பிராமண இளைஞர் சாரம் என்ற உடுப்போடு சைக்கிலில் செல்வதை கண்டு அதிர்ச்சியடைந்தேன். இன்னும் சிலர் நீள்காற்சட்டை நீலக்கண்ணாடி கழுத்தில் செயின். தலைமயிர் குடும்பிகட்டுவதில்லை. அதை அவிட்டு விட்டு கிப்பி மாதிரி திரியினம். இவர்களுக்கு நீங்கள் தான் தகுந்த முறையில் சொல்ல வேண்டும். இதை தயவு செய்து உங்கள் பத்திரிகையில் வெளியிடவும்.

வாழ்க சந்திர தீபம் ஆசிரியர் திரு.வை.நல்லையா அவர்கள்
வளர்க சந்திர தீபம்

இப்படிக்கு பணிவுள்ள தொண்டன்
கதிரவேலு நடேசு கோப்பாய்

சந்திரதீபம் ஆசிரியர் அவர்கட்கு.

தாங்கள் செய்து வரும் சேவையை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். சைவசமயமும் சமயக் கிரியையும் குருமாரும் இன்று அலைகடலில் சேர்ந்த ஒது ஓலையானது அந்த சமுத்திர அலையின் ஊடாக எவ்வளவு அல்லல் படுகிறதோ அதே நிலையில் இன்று சில ஆலயங்களும் குருமாரும் கிரியையும் பக்தர்களும் அல்லல்படுவதைக் காண்கிறோம். ஐயா சென்ற தை மீ 27 ந்திகதி பருத்தித்துறை கொட்டடி பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இவ்விழாவில் நாமும் சென்று வழிபடும் வாய்ப்பு கிடைத்தது. எமக்கு ஒரு பெரியதிருத்தி உண்டானது. ஏன் என்று அன்பர் கேட்கலாம். அங்கு விஸ்வநாதக் குருக்கள் என்பவர் தலைமை தாங்கி அபிஷேகத்தை நடத்தினர் அவருடன் ஒன்பது குருமாரும் சேர்ந்து செயல்புரிந்தனர். இத்துடன் விழா கையிலா காட்சியாக அமைந்து எம்மனதில் பட்டது குருக்கள் செய்த பெரும்தொண்டு என்னவாகில் ஒலிபெருக்கியை தனது கிரியை மந்திரங்களில் அனுமதிக்கவில்லை. அது எமக்கும் நாட்டுக்கும் இறைவனுக்கும் பெரும் சாந்தியை உண்டு பண்ணியது. இத்துடன் அவர்கள் தகுதி வாய்ந்த அறிவிற்சிறந்தவர்களை தலைமை தாங்கவைத்து நடத்தினர்கள். ஆகவே இவ்விதமான நிலையை மக்கள் ஆலயநிர்வாகிகள் குருமார் செய்து வந்தால் உண்மைச் சைவம் உயர்நிலை அடையலாம்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இங்ஙனம் சிவதொண்டன்

அன்பும் பண்பும் நிறைந்த ஆசிரியர்
தங்களுடைய சந்திரதீபம் பெற்று சந்தோசம் அடைந்தேன் தங்களுடைய புதிய முயற்சி தமிழ் மக்களுக்கு ஒரு புதிய உணர்ச்சியைக் கட்டாயம் ஏற்படுத்தும். யோகசுவாமியின் அன்பர் என்று நினைக்கும் பொழுது என்னைத் தெரியமல் தங்கள் மேல் அன்பு உண்டாகிறது. சுவாமியின் கிருபைபெருக்கும். தங்கள் தொண்டு சிவத்தொண்டு எல்லோருக்கும் [illegible]து.

இப்படிக்கு அ. செல்லத்துரை 177 ஏகாம்ரம்வீதி திருக்கோணமலை

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் வை. நல்லையா அவர்களால் [illegible] கத்தோலிக்க அச்சகத்தில் [illegible] பண்ணப்பட்டு வெளியிடப்பட்டது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org